பக்கங்கள் : பதின்நான்கு

மாநகர சபை, யாழ்ப்பாணம்.

உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 12 திங்கட்கிழமை (28.07.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 243

உணவுப் பொருள்களுக்கான தட்டுப்பாடு இன்னும் ஓரிரு தினங்களில் நீங்கும் சாத்தியம்

மூன்று கப்பல்களில் காங்கேசன் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஜூலை 28

குடாநாட்டில் உணவுப் பொருள்களுக்கு கடந்த சுமார் ஒரு மாதத்துக்கு மேலாக நிலவும் தட்டுப்பாடு இன்னும் ஓரிரு தினங்களில் நீங்கிவிடும். விலைகளும் வீழ்ச்சியடையும் சாத்தியமுண்டு.

யாழ். வணிகர் கழக வட்டாரங்கள் இத் தகவலை உதயனுக்குத் தெரிவித்தன.

உணவுப் பொருள்களின் விலையேற்றம் மற்றும் தட்டுப்பாட்டால் மக்கள் பெரும் கஷ்டமுறுவது குறித்துக் கேட்ட போதே கழக வட்டாரங்கள் மேற்கண்டவாறு தெரிவித்தன.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

கடந்த இருமாதங்களுக்கு முன்னர் யாழ். வர்த்தகர்கள் உணவுப் பொருள்களை கப்பலில் பெரும் அளவில் எடுத்து வந்தனர். அதன் காரணமாக பொருள்கள் தாராளமாகவும் குறைந்த விலையிலும் கிடைக்கக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

கண்டியில் தேடுதல் 45 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 28

கண்டி நகரப் பகுதியில் நேற்றுமுன்தினம் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பு ஒன்றின் போது 45 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

அந்தப் பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் தங்கியிருந்தவர்களே கைதுசெய்யப்பட்டனர். முறையான பதிவுகள் இல்லாத காரணத்தினாலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று கண்டிப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

புலிகளை முற்றாகத் தோற்கடிக்க இன்னும் 10,000 துருப்புகள் தேவை

படைவிட்டோடிகளுக்கு கோத்தபாய அவசர அழைப்பு

கொழும்பு, ஜூலை 28

விடுதலைப் புலிகளை முற்றாகத் தோற்கடிப்பதற்கு இன்னும் 10 ஆயிரம் படையினர் அவசரமாகத் தேவைப்படுகின்றனர் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

எனவே, கடந்த காலங்களில் இராணுவத்தை விட்டு ஓடியவர்கள், புலிகளை ஒட்டுமொத்தமாக அழித்தொழிக்கும் நடவடிக்கைக்குத் தமது பங்களிப்பை வழங்கும் முகமாக உடனடியாக மீண்டும் வந்து படையில் சேர வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பில் 485 பட்டதாரிகளுக்கு இன்று நியமனம்

கொழும்பு, ஜூலை 28

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனக்கடிதங்கள் இன்று உத்தியோகபூர்வமாக வழங்கப்படவிருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, 485 பட்டதாரி ஆசிரியர்களுக்கு இந்த நியமனக் கடிதங்களை வழங்குவார் என்றும்

(14 ஆம் பக்கம் பார்க்க)

பொலநறுவையிலும் மனிதப் புதைகுழி!

கொழும்பு, ஜூலை 28

பொலநறுவை மாவட்டம் ஹிங்குராக்கொட சரணாலயப் பகுதியில் நேற்று முற்பகல் மனிதப் புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

ஹிங்குராக்கொட தியாபெதும சரணாலயப் பகுதியில் தேன் எடுக்கச் சென்ற சிலர் அப்பகுதியில் சந்தேகத்திற்கிடமான குழி ஒன்றை அவதானித்தனர். அதன் பின்னர் அது குறித்துப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து குறிப்பிட்ட குழியினை தோண்டியபோது அதற்குள் இருந்து சில மனித எலும்பு எச்சங்களை பொலிஸார் கண்டெடுத்தனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகரா தெரிவித்தார்.

மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்திருக்கின்றனர்.

இதேவேளை, எச்சங்களுக்குரியவர்கள் நீண்ட

(14 ஆம் பக்கம் பார்க்க)

துணுக்காயில் வெள்ளியன்று 25 இராணுவத்தினர் மரணம்

விடுதலைப் புலிகள் தரப்பில் அறிவிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 28

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் கல்விளான் பகுதி நோக்கி கடந்த வெள்ளிக்கிழமை முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது தாங்கள் நடத்திய பதிலடித தாக்குதலில் 25 படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என்று விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் படையணிகள்

(14 ஆம் பக்கம் பார்க்க)

கருணா அணி உறுப்பினர்கள் இருவர் அதிரடிப்படையின் சூட்டில் படுகாயம்

தேவாலய உற்சவத்தில் கலந்துகொண்ட வேளையில்

மட்டக்களப்பு, ஜூலை 28

மட்டக்களப்பு புதூர் பிரதேசத்தில் தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் (கருணா அணி) உறுப்பினர்கள் இருவர் விசேட அதிரடிப்படையினரின் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்திருக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

மல்லாவிக்குச் சமீபமாக இப்பொழுது தாக்குதல் நடத்தப்படுவதாகப் படைத்தரப்பு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 28

மாங்குளம் - வெள்ளாங்குளம் வீதியை நோக்கிச் செல்லும் படையினர் மல்லாவிக்குச் சமீபமாகத் தமது படை நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர் என்று பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

வவுனியா, மன்னார் களமுனையில் மேற்கொண்டு வரும் படைநடவடிக்கைகளின் போது இடம்பெற்ற மோதல்களில் விடுதலைப்புலிகளின் 13 உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர் என்று படைத்தரப்பு அறிவித்துள்ளது.

வவுனிக்குளம் பகுதியில் நேற்று இடம் பெற்ற மோதல்களின் பின் படையினர் மேற்கொண்ட தேடுதலில் பெரும் எண்ணிக்கையான

(14 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

கல்விச்சுடர்

7 ஆம் பக்கத்தில்:
★ தரம் - 5 மாணவருக்கான மாதிரி வினாப்பத்திரம்

8 ஆம் பக்கத்தில்:
க.பொ.த (உயர்தர)மாதிரி வினாத்தாள்
★ இணைந்த கணிதம்

மாகாணசபைத் தேர்தல் முடிவடைந்ததும் மஹிந்தவின் அரசாங்கம் விரட்டப்படும்

ரணில் விக்கிரமசிங்கா சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 28

வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல்களில் ஐக்கியதேசியக் கட்சி வெற்றி பெறுவது நிச்சயம் அதன் பின்னர் நாட்டில் நல்லாட்சி நடைபெறும். மஹிந்த அரசு விரட்டப்படும். எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஐ.தே.கட் சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்கலந்து கொண்டு உரையாற்றிய போதே எதிர் கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க இவ்வாறு கூறினார்.

அவர் அந்தத்

(14 ஆம் பக்கம் பார்க்க)

குருதிக் கொடையாளர்களே உங்கள்! உன்னத தியாகத்தை மதிக்கின்றோம்

(11 ஆம் பக்கத்தைப் பாருங்கள்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாவைக் கார்த்திகைத் திருவிழாவில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள்

வலி.வடக்கு, ஜூலை 28

வரலாற்று புகழ்மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் காம்யோற்சவத்தில் நேற்று கார்த்திகைத் திருவிழா பக்தி பூர்வ மாக இடம்பெற்றது.

குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கு நேர்த்தி வைத்த பலரும் கார்த்திகை திருவிழா வான நேற்று பறவைக்காவடிகள் எடுத்தனர்.

மல்லாகம் பழம் பிள்ளையார் கோயிலில் இருந்தும், மானிப்பாய், புன்னாலைக்கட்டுவன் மற்றும் இடங்களில் இருந்தும் மாவைக்கந்தன் ஆலயத்தை நோக்கிப் பக்தர்களின் பறவைக் காவடிகள் சென்றன.

மல்லாகம் பழம்பிள்ளையார் கோயிலில் இருந்து பக்தர் ஒருவரின் பறவைக்காவடி புறப் பட்ட போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம். படம்:- நேசன்

இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு மாவிளக்கிட்டு தமது நேர்த்திகளை நிறைவேற்றினர்.

மீண்டும் தமது பூர்வீக - சொந்த - இடங் களில் மீளக்குடியமர வேண்டும் என்று பக்தர்கள் பலரும் முருகனை வேண்டி பிரார்த்தனை செய்வதை அவதானிக்க முடிந் தது.

நேற்று முற்பகல் 10 மணிக்கு விசேட அபிஷேகங்கள், பூசைகள் இடம்பெற்றன.

அதைத் தொடர்ந்து வீணை, புல்லாங் குழல் கச்சேரிகளுடன் ஷண்முகார்ச்சனை பக்திமயமாக நடைபெற்றது. அதன் பின் னர் முருகப்பெருமான் உள்வீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள் காட்சி தந்தார்.

ஆலயத்தை நோக்கி பல பக்தர்கள் பற வைக்காவடி எடுத்து தமது நேர்த்திக்கடன் களைப் பூர்த்தி செய்தனர்.

கடந்த வருடங்களை விட இம்முறை பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் மாவிளக்கேற்றி முருகன் அருள் வேண்டி னர்.

தெல்லிப்பழை சோதனை நிலையத் துக்குச் சென்ற பக்தர்களின் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொண்ட படையி னர் விசேட 'பாஸ்' ஒன்றை வழங்கினர். தெல்லிப்பழை சோதனைச் சாவடியில் இருந்து ஆலயம் வரை செல்வதற்கு நேற்று அதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப் பட்டிருந்தன. (அ-1-86)

தொண்டு நிறுவனத்திடம் புலிகள் வாகனத்தைப் பெற்றுள்ளனராம்

அரசாங்கம் குற்றஞ்சாட்டுகிறது

கொழும்பு, ஜூலை 28

கிளிநொச்சியில் செயற்பட்டுவரும் நோர்வே அரச சார்பற்ற அமைப்பொன்றிட மிருந்து விடுதலைப் புலிகள் கடந்த வாரம் பெரும் எண்ணிக்கையான வாகனங் களைப் பெற்றுள்ளனர் என்று அரசினதும் பாதுகாப்பு அமைச்சினதும் உத்தியோக பூர்வ இணையத்தளங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

சர்வதேச அரச சார்பற்ற அமைப்பொன் றின் வாகனம் பாதுகாப்புப் படையினரால் தாக்கப்பட்டுள்ளது என்ற சர்வதேச பிரசா ரத்திற்காக விடுதலைப் புலிகள் இவற் றைப் பயன்படுத்தலாம் எனத் தாங்கள் கருதுகின்றனர் என்று படையினர் தெரி வித்திருக்கின்றனர்.

வடக்கில் செயற்பட்டு வரும் சர் வதேச அரச சார்பற்ற நிறுவனமொன்றிட மிருந்து பெறப்பட்ட வாகனங்களை விடுத லைப் புலிகள் தமது இராணுவ நடவடிக் கைக்குப் பயன்படுத்துகின்றனர் என நம் பகத்தன்மை வாய்ந்த தகவல்கள் மூலம் அறியமுடிகின்றது.

விடுதலைப் புலிகள் தமது பொய்ப்பிர சார நடவடிக்கைகளுக்கும் இதனைப் பயன் படுத்தத் திட்டமிட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் செயற்படும் 'நோர்வே ஜியன் பீப்பிள் எய்ட்' எனும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்பிடமிருந்து கடந்த வாரம் விடுதலைப் புலிகள் இந்த வாகனங் களைப் பெற்றுள்ளனர். புல்டோசர்கள், கனரக வாகனங்கள், ஜீப் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் உட்படப் பெருமளவு வாக னங் கள் இதில் அடங்கும்.

குறிப்பிட்ட சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம் மனிதாபிமானப் பணிகளுக்குப் பயன்படுத்துவதற்காக எனத் தெரிவித்தே இந்த வாகனங்களை விடுதலைப் புலிக ளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்குக் கொண்டுசென்றுள்ளது.

எனினும், தற்போது இந்த வாகனங் களை பதுங்கு குழிகளையும், முகாம்களை யும் அமைப்பதற்கும் அவர்களது தலைவர் களின் போக்குவரத்துக்கும் விடுதலைப் புலிகள் பயன்படுத்துகின்றனர்.

அரசின் மீது பழியைச் சுமத்துவதன் மூலம் பிரசார வெற்றியொன்றைப் பெறுவ தற்காக விடுதலைப் புலிகள் இந்த வாகனங் களைப் பயன்படுத்தலாம். கடந்த காலங் களில் வன்னியில் பொதுமக்களைக் கொலை செய்துவிட்டு வெற்றிகரமாக அந்தக் குற் றச்சாட்டை அவர்கள் அரசின் மீது சுமத் தினர் என்று அரச இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

விமல் வீரவன்ஸ அணி எம்.பிக்களை மீண்டும் வளைக்க ஜே.வி.பி. முயற்சி?

கொழும்பு, ஜூலை 28

ஜே.வி.பியிலிருந்து பிரிந்து சென்று விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணியில் இணைந்தவர்களை மீண்டும் ஜே.வி.பியில் இணைத்துக் கொள்வதற்காக இரகசியப் பேச்சுகள் மேற்கொள்ளப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்களை மீண்டும் இணைந்துக் கொள் வது தொடர்பாக ஜே.வி.பி. கட்சி தலை மையினால் இரண்டு சுற்றுப் பேச்சுகளை நடத்தியுள்ளது.

தேசிய சுதந்திர முன்னணியில் இணைந்து கொள்வதன் மூலம் கிடைக்கக்கூடிய நன் மைகள் குறித்து அளித்திருந்த வாக்குறுதி களை விமல் வீரவன்ஸ நிறைவேற்றத் தவறி யதைத் தொடர்ந்தே அந்த எம்பிக்கள் மீண் டும் ஜே. வி. பிக்குத் திரும்புவது குறித்துத் தீர்மானித்துள்ளனர் - என்று கூறப் படுகிறது. ஒகஸ்ட் 23ஆம் திகதி நடை பெறவுள்ள மாகா ணசபைத் தேர்தலுக்கு முன்னதாக இவர்க ளில் சிலர் மீண்டும் ஜே. வி. பியில் இணைந் து கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூ ரியின் ஏற்பாட்டில் முத்தமிழ் விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு பீடாதி பதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா கலந்து கொள்வார்.

பிச்சையப்பா ரஜீந்திரன் குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகி முகிழ்நிலை ஆசிரியர்களின் நிகழ்வுகளும் தொடர்ந்து இடம்பெறும். (01)

உயர்தரப்பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

அடுத்தமாதம் 6ம் திகதி ஆரம்பமா கவிருக்கும் ஜீ.சீ.ஈ (உயர்தரம்) பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் நாளைமறுதினம் புதன்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம் பெறவுள் ளது.

கோப்பாய்க் கோட்டம் மற்றும் வடம ராட்சி, வலிகாமம் ஆகிய வலயங்களில் பரீட்சை நிலையங்களில் பணிகளில் ஈடு படவுள்ள மேற்பார்வையாளர்கள், உதவிப் பரீட்சை மேற்பார்வையாளர்கள், இணைப்பு உத்தியோகத்தர்கள், உதவி இணைப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோரை இக்கூட் டத்தில் கலந்து கொள்ளு மாறு வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ் வரன் கேட்டுள்ளார்.

மகளிருக்கான 3 நாள் அழகுக்கலை பயிலமர்வு

அடிப்படை முக அழகுக்கலை (Basic Facial) இந்து, கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம், மடிசார், குஜராத்தி கூர்க் காஸ் முறைகளிலான சேலை அணிதல் என்பன எதிர் வரும் ஒகஸ்ட் 1ஆம், 2ஆம், 3ஆம் திகதிகளில் (வெள்ளி, சனி, ஞாயிறு) காலை 9 மணிமுதல் பி.ப. 2 மணிவரை போதிய விளக்கங்களுடனும் குறிப்புகளுடனும் இடம்பெறவுள்ளன. இறுதியில் பயிலமர்வில் பங்குபற்றியமைக்கான சான்றிதழும் வழங்கப்படும்.

➢ பயிற்சிக்கட்டணம் மற்றும் மேலதிக விவரங்களை இன்றி லிருந்து எதிர்வரும் வியாழன் வரை பி.ப. 1 மணிக்கு முன் னர் நேரில் அறிந்து கொள்ளலாம்.

கலாலயா
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம். பதிவாளர்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் M. Phil . பட்டம் பெற்ற ஆசிரியர்களான

திரு. அமிர்தலிங்கம் பௌநந்தி (B.A (HONS), PGDE, M. Phil) அவர்களையும்

திரு.சுப்பிரமணியம் குணேஸ்வரன் (B.A (HONS), M. Phil) அவர்களையும்

அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகிறோம்.

யா/ அம்பன் அ.மி.த.க.பா., குடத்தனை. (சி/553929) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சென்ஸ் ஜோன்ஸ் கல்லூரி மாணவன் K.T.கபிலன் (ஆண்டு 10 E) 7 விக்கெட்டுக் களைச் சாய்த்து வெற்றிபெற ஊக்கமளித்த பாடசாலை அதிபர், பாடசாலை விளையாட்டுப் பொறுப்பாசிரியர், சிரமம்பாராது பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் பாடசாலைச் சமூகத்திற்கும் கபிலன் சார்பில் எமது மனமார்ந்த நன்றிகள். மேலும் கல்லூரி மென்மேலும் அபார வெற்றியீட்டவும் மாண வன் விளையாட்டிலும், கல்வியிலும் சிறந்து விளங்கவும் எல் லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து நிற்கும்.

பெற்றோர், சகோதரிகள், அம்மம்மா, சித்தப்பா, சித்தி, புனிதன் மாமா, யோகிமாமா, குடும்பத்தினர்.

18, கேசாவில் வீதி, யாழ்ப்பாணம். (76662)

கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் யாழ்ப்பாண முகாமையாளர்
மு.கிருபாகரன்
அவர்களின் அன்புத் தந்தை
அமரர்
சுப்பிரமணியம் முத்துமணியம்

அவர்களின் பிரிவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பது டன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

செலிங்கோ கிராமின் கிரடிட்கம்பனி, யாழ்ப்பாணக்கிளை. (76687)

மரண அறிவித்தல்

சுப்பிரமணியம் முத்துமணியம்



சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் முத்துமணியம் நேற்று (27.07.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவ ரும் கிருபாகரன் (கிளை முகாமையாளர், சிலிங்கோ கிராமின் கிறடிற் கம்பனி, யாழ்ப் பாணம்) அவர்களின் அன்புத் தந்தையும் அருட்செல்வி (ஆசிரியை, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அவர்களின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற பூமாதேவி, சரஸ்வதி, பூமணி, காலஞ்சென்ற யோகேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற நித்தியானந்தன், பூபாலசிங்கம், விஜயரத்தினம், நடராஜா (ஹொலன்ட்), நிமலதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2008) நண் பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொற்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீனாட்சியம்மன் கோயிலடி, சங்கத்தானை, சாவகச்சேரி (A)

தகவல்: மு.கிருபாகரன் (மகன்)

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 11 ★ 02 ★ 1953

உதிர்வு 11 ★ 08 ★ 2004

திருமதி அன்னலிங்கம் பாக்கியலட்சுமி

திதி: அபரபக்க ஏகாதசி (28.07.2008)

எங்கோ பிறந்தோம்! எங்கோ வளர்ந்தோம்!
வாழ்க்கையில் இணைந்தோம்!
ஆண்டுகள் முப்பது கூடிவாழ்ந்தோம்
உம்மை இழந்த பின்னரான
ஒவ்வொரு நாளும் எஞ்சிய
காலத்தை எப்படி வாழ்ந்து
முடிக்கப் போகிறேன் என்ற
அச்சத்துடன் நடைப்பிணமாக வாழ்கிறேன்
உனது இழப்பை எனது
மரணம் ஒன்றே ஈடு செய்யும்
என்பதை உணர்கின்றேன்.

என்றும் உன் நினைவுகளுடன்

44, 3 ஆம் குறுக்கு வீதி, கொழும்புத்துறை. (76688)

கணவர், பிள்ளைகள், மருமகள், பேரன்.

ஒத்துமாறல்

கண்டி தேசிய பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியை ஒருவர் யாழ்ப்பாணப் பாடசாலைக்கு ஒத்துமாற உள்ளார். ஒத்துமாற விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். T. 021 2263808

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் உயிரில் இரு தரப்புமே அக்கறை இல்லாத போக்கையே கொண்டுள்ளனர்

இலங்கை ஜனநாயகக் கழகம் கண்டிக்கின்றது

கொழும்பு, ஜூலை28

இலங்கையில் மோதலில் ஈடுபட்டுள்ள அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பொது மக்களின் உயிர் சம்பந்தமாக முற்றுமுழுதாக கவலையீனமான போக்கையே கடைப்பிடித்து வருகிறார்கள் என்று இலங்கை ஜனநாயகக் கழகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்று வரும் போருக்கு ஒரு போதும் இராணுவ ரீதியில் விடை காணமுடியாது. இதுவரை 70 ஆயிரம் உயிர்களைக் காவு கொண்டுள்ள பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை உருவாக்கியாக வேண்டும் என்று அக் கழகம் தெரிவித்துள்ளது.

வன்முறையைக் கைவிட்டு இராணுவ நடவடிக்கைகளை ஓரங்கட்டிவிட்டு, சமாதான சகவாழ்வையும் ஜனநாயகத்தையும் வளர்த்தெடுக்கும் அரசியல் கலாசாரம் ஒன்றை எல்லோரும் பேணுவதற்கு முயற்சி செய்யவேண்டும்.அதன் மூலம் நியாயமான அரசியல் தீர்வொன்றை உருவாக்கி சகல சமூகங்களினதும் குறைகளையும் நிவர்த்திசெய்து அபிலாஷைகளை நிலை நாட்ட முயலவேண்டும் என்று அந்த அமைப்புவெளியிட்டஅறிக்கையில்தெரிவித்துள்ளது.

சர்வகட்சி மாநாடு மற்றும் விசாரணை ஆணைக்குழுக்கள் மூலம் ஏற்படவிருந்த சாதக சூழ்நிலைகள் அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் நிராகரிக்கப்பட்டு விட்டன என்று தெரிவித்துள்ள அந்த அமைப்பு இனங்களுக்கிடையிலான சகவாழ்வும், பன்முகத்துவமும் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. சமூகங்கள் அரசியல் பெரும் பான்மை ஆதிக்க கலாசாரத்துக்குட்பட்டு மீள் இணக்கப்பாடு ஏற்படுவதற்கு அது பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது என்று தெரிவித்துள்ளது.

அரசியல் கலாசாரத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி மீள் இணக்கப்பாட்டினை உருவாக்குவதற்கு 1983 ஆம் ஆண்டின் நிகழ்வுகளின் நினைவுகளை பதவிக்கு வந்த அரசுகள் பயன்படுத்திக் கொள்ளவில்லைஎன்றும்சூழ்கம்தனதுஅறிக்கையில் கண்டித் துள்ளது.

இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கமும் , இலங்கை பத்திரிகை நிறுவனமும் இணைந்து நடத்திய ஊடகவியலாளர் விருது வழங்கும் வருடாந்த நிகழ்வில் -

இவ்வருடத்திய வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற ஐவரில் ஒருவரான 'சுடர் ஒளி' பத்திரிகையின் விவரணக்கட்டுரை ஆசிரியர் கே.ரி.சிவகுருநாதன் விருது சூட்டிக் கௌரவிக்கப்படுவதை முதலாவது படத்தில் காணலாம்.

கடந்த வருடம் கொலையுண்ட பத்திரிகையாளர்களில் ஒருவரான 'உதயன்'செய்தியாளர் செ.ராஜிவர்மனுக்கான விருதை 'உதயன்' குடும்பத்தைச் சேர்ந்த வி.சோமசுந்தரம் பிரதம விருந்தினரான முன்னாள் பத்திரிகை கவுன்ஸிலின் தலைவர் 'தேசமானிய' எஸ்.குணசேகராவிடம் இருந்து பெற்றுக்கொள்வதை இராண்டாவது படத்தில் காணலாம்.

யாழ்.முனீஸ்வரன் வீதியில் பராமரிப்பின்றி இருந்த கொட்டகைகள் அகற்றப்படுகின்றன

யாழ். முனீஸ்வரர் வீதியில் புல்லுக்குளத் திற்கு முன்பாக முன்னர் அமைக்கப்பட்ட கொட்டகைகள் நேற்றுமுன்தினம் அகற்றப்பட்டன.

யாழ். மாநகராட்சி மன்றத்தி[illegible]ல் நடைபாதை வியாபாரிகளுக்கென [illegible]கொட்டகைகள் அமைக்கப்பட்டிருந்த[illegible]னினும் கொட்டகைகளின் கூரை, தகரங்கள் என்பன தொடர்ந்தும் திருட்டுப் போகின்றன.பராமரிப்புஎதுவுமின்றிக் கிடந்தஇந்தகொட்டகைகளை மாநகராட்சி மன்றம் அகற்றியுள்ளது.(202-224)

தமிழர் ஏற்றுக்கொள்ளும் சமஷ்டித் தீர்வை முன்வைப்பதற்கு தென்னிலங்கை தயாரா?

தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி. இரா.சம்பந்தன் கேள்வி

கொழும்பு, ஜூலை 27

''தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய சமஷ்டி முறையிலான தீர்வை அரசு முன் வைக்க வேண்டும் எனநாம் பகிரங்கமாகக் கேட்டுக் கொள்கிறோம். அதற்கு இந்த அரசு தயாராக இருக்கின்றதா?'' - இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

'தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம்' என்ற தொனிப் பொருளில் கடந்த வெள்ளிக்கிழமைகொழும்பில்உள்ளஇடதுசாரிமுன்னணியின் அலுவலகத்தில் கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு விசேட உரையாற்றியபோதே சம்பந்தன் மேற்படி கேள்வியைத் தொடுத்திருந்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ் மக்கள் இந்நாட்டின் பூர்வீகத் தினர். தனிப்பட்ட தேசியம் என்ற வகையி லும், சாதாரண மக்கள் என்ற வகையிலும் அவர்களுக்கு உரிய தீர்வுகள் வழங்கப்பட வேண்டும். ஆனால், அன்று தொட்டு இன்றுவரை தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு சம்பந்தப்பட்ட தரப் பினரால் முன்வைக்கப்படவேயில்லை. மாறாகப் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.

தமிழர்களின் மொழி, கலாசாரம், பாரம் பரியம் என்ற அடிப்படையில் அவர்கள் தமிழ்த் தேசிய இனம் என்ற பெயரைப் பெறுகின்றனர். அவர்களுக்குசுயநிர்ணயஉரிமைஉரித்துண்டு. ஐ.நா. சபையின் சாச னங்கள் மற்றும் விதிகளில் ஏற்றுக்கொள்ளக் கூடிய உரிமை அவர்களுக்கு உண்டு. சுயநிர்ணய உரிமை தொடர்ந்து மறுக்கப்படுமானால் அதைப் பெறுவதற்கு வேறு வழிகள் இல்லாமல் இல்லை.

தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய, சமஷ்டி முறையிலான தீர்வை அரசு உடன் முன்வைக்கவேண்டும் என நாம் பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கின்றோம். அந்தத் தீர்வை அரசு முன்வைக்க வருமானால் அது விடுதலைப் புலிகளுக்கு சவாலாக அமையும். ஆனால் அரசு ஒருபோதும் சஷ்டித் தீர்வை முன்வைக்கத் தயாரில்லை.

விரைவில் அரசு விரைவில் எதிர்நோக்கும்

நாட்டில்இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இனப்படுகொலையை நிறுத்துவதற்கு சர்வதேச சமூகம் அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். ஆனால் சர்வதேசத்தின் கோரிக்கைகளை அரசு செவிசாய்க்கவே மாட்டது! இதற்கான விளைவை அரசுமிக விரைவில் எதிர்நோக்கும்.

சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் சிங்கள அரசோ, தமிழ்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இயக்கங்களோ இந்தியாவைத் திருப்திப்படுத்தும் வகையில் நடந்துகொள்ளவில்லை. அது இந்தியாவின் மனதில் இருந்துகொண்டே இருக்கின்றது.

தமிழர்களுக்கு விளைவிக்கப்பட்டு வரும் அநீதிகள் இந்தியாவுக்கு நன்றாகத் தெரியும். இந்தியாவால் தற்போதைய இலங்கை அரசுக்கு தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது. அதில் முக்கியமாக வடக்கு - கிழக்கு இணைப்பு விடயம் உணர்த்தப்பட்டது. இராணுவத் தீர்வல்ல; அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமான அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டும் என்று இந்திய அரசு, இலங்கை அரசுக்கு எடுத்துக்கூறி வருகின்றது. இந்தியாவை நாம் ஒதுக்கிவிட முடியாது. அவர்கள் எமக்குக் கைகொடுக்கக் கூடியவர்கள்.

இந்நாட்டில் இனப்படுகொலைகள் மோசமாகச் சென்றுகொண்டிருக்கின்றன.

இந்த அரசுஎவ்வித அக்கறையும் இல்லாமல் தமிழர்களை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது. யுத்தத்தின் மூலம் புலிகளை முடிக்கலாம் என்று சிங்களவர்கள் கருதுகிறார்கள். ஆனால் இது பிழையான கருதுகோள்.

கிழக்கு மாகாணம் தற்போது சிங்கள மயப்படுத்தப்பட்டு வருகின்றது. அங்கு தமிழர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதில்லை. கடந்த ஓரிரு வாரங்களிற்கு முன்னர் கிழக்கு மாகாணத்தில் 237 பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் பெற்றனர். இதில் ஒருவர் கூட தமிழ் ஆசிரியரோ, முஸ்லிம் ஆசிரியரோ இல்லை. முழுவதும் சிங்களவர்கள்தான். இந்த நாட்டில் 25 வீதமானவர்கள் தமிழர்கள். ஆனால் அரச சேவையில் நியமிக் கப்பட்டிருக் கும் தமிழர்கள் 8 வீதத்தினரே - என்றார்.

ஆனைக்கோட்டையில் பாடசாலை செல்லாத பிள்ளைகள் மீளவும் இணைப்பு

நவாலி, ஜூலை28

ஆனைக்கோட்டை பிரதேசத்தில் உள்ள பாடசாலை செல்லாத 8வயது முதல் 14 வயது வரை உள்ள பிள்ளைகள் இனங்காணப்பட்டு அவர்கள் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தில் தற்போது இணைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கென இங்கு தனியார் வகுப்பறை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுகற்றல் கற்பித்தல் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

தனியான ஆசிரியர் ஒருவரும் பாடசாலை அதிபர் சிவகடாட்சத்தின் அனுசரணையுடன் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். (202-100)

சுத்திகரிப்புத் தொழிலாளர் பதவிக்கு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 28

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பகுதியில் சுத்திகரிப்புத் தொழிலாளர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான செயன்முறை நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 31 ஆம் திகதியும் முதலாம், இரண்டாம் திகதிகளிலும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நடைபெறும்.

பரீட்சார்த்திகளுக்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

அரச அலுவலர் வாழ்க்கைச் செலவுப்படி அதிகரிப்பு: யாழ்.திணைக்களங்களுக்கு சுற்றறிக்கை கிடைத்தது

யாழ்ப்பாணம், ஜூலை28

அரச அலுவலர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் படியை அதிகரித்து வழங்குவது தொடர்பான சுற்றறிக்கை சகல திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் டி.திசா நாயக்கா இந்தச் சுற்றறிக்கையை அனுப்பி வைத்துள்ளார்.

ஆரம்ப மாதச் சம்பளமாக 22 ஆயிரத்து 935 ரூபாவுக்கு குறைந்த சம்பள அளவுத் திட்டத்தை கொண்டுள்ள பதவிகளில் பணியாற்றும் அலுவலர்களுக்கு 01.07.2008 ஆம் திகதி தொடக்கம் திருத்திய மாதாந்த வாழ்க்கைச் செலவுப் படியாக 3 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படவுள்ளது.

ஆரம்ப மாதச் சம்பளமாக 22 ஆயிரத்து 935 ரூபா அல்லது அதற்குக் கூடிய சம்பளத் திட்டங்களில் கொண்டுள்ள பதவிகளில் பணியாற்றும் அலுவலர்களுக்கு 01.07.2008 தொடக்கம் 2 ஆயிரத்து 875 ரூபா வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்படவுள்ளது.

நாளாந்த சம்பளம் பெற்று வரும் அலுவலர்களுக்கு 01.07.2008 ஆம் திகதி தொடக்கம் நாளாந்தம் வாழ்க்கைச் செலவுப்படியாக 116.66 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது என அச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (202-207)

போஸ் கோ
மீண்டும் புதுப்பொலிவுடன் போஸ் கொப்பிகள்
மற்றும் பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், எழுது கருவிகள் உட்பட
அனைத்துப் பொருள்களும் நியாயமான விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
போஸ் காகிதாதிகள், இல. 57, மொயினுதீன் மாவத்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னங்கை உரும்பிராய் மேற்கு ஸ்ரீ ஞான வைரவர் ஆலயக் கட்டட நிதிக்கான மாபெரும் அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்

முதலாம் பரிசு -2687
2 ஆம் பரிசு -2391
3 ஆம் பரிசு - 1848

ஆறுதல் பரிசுகள்
1)990 2)2000 3)221 4)2767
5)233 6)3273 7)1153
8)1829 9)318 10) 2389

மேற்படி இலக்கப் பரிசு உடையவர்கள் 05.08.2008 ஆம் திகதிக்கு முன் ஆலய பரிபாலன சபையுடன் தொடர்பு கொண்டு பரிசுகளைப் பெற்றுகொள்ளவும்

(76686)

ஸ்ரீ ஞான வைரவர் ஆலய பரிபாலன சபையினர்.

THE ROYAL COLLEGE OF JAFFNA

O/L , A/L மட்டம்வரை மாணவர்களுக்கான ஆங்கில இலக்கணம் மற்றும் விரைவு SPOKEN ENGLISH வகுப்புகள் நடைபெறுகின்றன.

BY: ந.விக்கினேஸ்வரன் ஆசிரி
426(302)கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம், மீனாட் வீதி,
சங்கானை
'THE ROYAL IS THE BEST'

மரண அறிவித்தல்

பூலோகசிங்கம் வெற்றிவேலு

(இளைப்பாறிய அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய பூலோகசிங்கம் வெற்றிவேலு நேற்று (27.07.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான Dr.பூலோகசிங்கம்-பொன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், திருமதி நாகேஸ்வரி (இராஜேஸ்வரி-இளைப்பாறிய ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சேனாதிராஜா - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற குமாரசாமி (முன்னாள் கூட்டுறவு சிரேஷ்ட ஆணையாளர்) மற்றும் திருமதி செல்வநாயகி, ஸ்ரீநிவாசன் (லண்டன்), சுந்தரலிங்கம்(ஓய்வுபெற்றP.W.Dஓவசியர்), திருமதி வேதநாயகி கனகசபாபதி, திருமதி இராஜநாயகி அபயசிங்க ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற திருமதி லதா சிவகுமார் (முன்னாள் கணக்காளர், வடக்கு, கிழக்கு மாகாண சபை) மற்றும் அசோகன்(கணக்காளர்) , Dr.குமரன், இராதாகிருஷ்ணன் (கணனிப் பொறியியலாளர்), Dr.செல்வரஜனி(காது , மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர், கேகாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காராளசிங்கம் சிவகுமார் (முன்னாள் பொறியியலாளர், மகாவலி அபிவிருத்திச் சபை), புவனேஸ்வரி (விரிவுரையாளர்), Dr.வாசுகி, தாரணி, Dr.முகுந்தன்(மார்பு வைத்திய நிபுணர், இரத்தினபுரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹரிசரவணா, வைதேகி, ஹரிகஜன், அரன், செந்தூரன், விதுஷா, ஹிமவண், சாம்பவி, வருண், ஜீவன், கீர்த்தனா, கீர்த்திகன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 25, டாபரே மாவத்தை, நாரஹேன்பிட்டியில் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும். இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr.செல்வரஜனி முகுந்தன்
(மகள்).

இல: 25, டாபரே மாவத்தை,
நாரஹேன்பிட்டி. (சி-553930)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

திருமதி

மனோன்மணி இராசரெத்தினம்

அன்னை மடியில்	ஆண்டவன் அடியில்
06 - 05 - 1920	28- 06 - 2008

கண்ணை இமை காப்பது போல் எமைக்காத்து வளர்த்தீர்கள் அம்மா! கணப்பொழுதில் எமை மறந்து பறந்த தெங்கே அம்மா? கண்ணீரில் நாம் மிதந்து கரைகின்றோம் அம்மா! கருணை கொண்டு மீண்டும் எம் குடியில் பிறந்துவாம்மா! எங்கள் குலவிளக்கே முப்பதொரு நாள்கள் சென்றாலும் உங்கள் வதனமும் எம் மனதோடு வாழுமம்மா.

26.06.2008 அன்று சிவபதமெய்திய எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபந்தெரிவித்தோருக்கும் மரணச் சடங்கு கிரியைகளில் கலந்து கொண்டு உதவி புரிந்தவர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அமரரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று(28.07.2008)திங்கட்கிழமை மு.ப.9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணத்தில் தாங்களும் கலந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத தொடாந்து நடைபெறும் மதியபோசனத்திலும்பங்குகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்,
இ.பரநிருபசிங்கம்(மகன்).
தொ.பே.: 0776045581

இல.44, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம். (76684)

கண்ணீர் அஞ்சலி

அமரர் பூலோகசிங்கம் வெற்றிவேலு

(ஓய்வுபெற்ற அதிபர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி-
உப தலைவர், கொல்லங்கிராய் வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை,
நுணாவில் மேற்கு)



சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் புகழ் பூத்த முன்னாள் அதிபரும் நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையில் நீண்ட காலமாக உப தலைவராக இருந்து நற்பணிகள் பல ஆற்றியவருமான **பூலோகசிங்கம் வெற்றிவேலு** அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்,
கொல்லங்கிராய் வீரகத்தி
விநாயகர் ஆலயம்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. (76690)

41ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்மகிழ
15
-
05
-
1937

மனம்துடிக்க
18
-
06
-
2008

அமரர் பூதர் ஐயாத்துரை

(பிரபல கட்டட ஒப்பந்தகாரர், உரிமையாளர், ஸ்ரீமுருகன் தொழிற்சாலை)

எம் மண்மகிழ, மனம் மகிழ வந்துதித்த சூரியனே!
பலர் வாழ்வுக்கு ஆலமரம் போல் வாழ்வு தந்தவரே!
நீர் மறைந்துபோனாலும், உம் சேவையும், ஆகரவும்
என்றும் எம்மக்களின் மனங்களைவிட்டு நீங்காது!

எமது தந்தையின் மறைவையொட்டி ஓடோடிவந்து ஆதரவுதந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும், ஆறுதல், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் சகல நிகழ்வுகளின்போதும் உதவி புரிந்த அனை வருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (28.07.2008) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன் புடன் அழைக்கின்றோம்.

நி.முகவரி: K.K.S. வீதி, தெல்லிப்பழை,
த.முகவரி: உச்சியோடை, மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

(நேற்றைய பத்திரிகையில் 4 ஆம் பக்கத்தில் பிரசுரமான விளம்பரத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (27.07.2008) ஞாயிறுக்கிழமை எனப் பிரசுரமாகியது தவறாகும்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பென்டில்கரன் 64 ஓட்டங்களை விளாச, பவகுகன் 6 விக்கெட்டுக்களை வீழ்த்த

'சுப்பர் 6' சுற்றுக்கு முன்னேறியது யாழ்ப்பாணக் கல்லூரி

யாழ்ப்பாணம், ஜூலை 28

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 15 வயதுப் பிரிவினருக்கான ஆட்டங்களில் தாம் எதிர்கொண்ட நான்கு ஆட்டங்களிலும் வென்று 'சுப்பர் 6' பிரிவுக்கு யாழ்ப்பாணக் கல்லூரி முன்னேறியுள்ளது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணிக்கு எதிரான ஆட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி வீரரான பென்டில்கரன் 64 ஓட்டங்களை விளாசினார். பவகுகன் 6 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில்யாழ்ப்பாணக்கல்லூரியும்சென்.ஜோன்ஸ்'பி' அணியும்மோதின.

பந்து வீச்சில் லக்ஸ்மன் 10 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவருடன் 35 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டினையும், சிறிவாணன் 4 ஓவர்கள் பந்து வீசி 1 ஓட்டமற்ற ஓவருடன் 16 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டினையும் தனோஜன் 10 ஓவர்கள் பந்து வீசி 5 ஓட்டமற்ற ஓவர்களுடன் 18 ஓட்டங்களிற்கு 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

இவ் வாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றது.

பென்டில்கரன் 4 நான்குகள் உட்பட 64 ஓட்டங்களையும், பென்ஜோ 6 நான்குகள் உட்பட 35 ஓட்டங்களையும் மதுசன் 4 நான்குகள் உட்பட 30 ஓட்டங்களையும் கஜேந்திரன் ஆட்டமிழக்காமல் 1 நான்கு உட்பட 33 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 29 ஓட்டங்கள் பெறப்பட்டன.

வில்சன் 9 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், சபேசன் 9 ஓவர்கள் பந்து வீசி 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், கவாஸ்கர் 3 ஓவர்கள் பந்து வீசி 29 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 24 ஓவர்களில் சகலவிக்கெட்டுக்களையும் இழந்து 75 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது.

வில்சன் 1 நான்கு உட்பட 17 ஓட்டங்களையும் ஸ்டீபன் 2 நான்குகள் உட்பட 9 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 24 ஓட்டங்கள் பெறப்பட்டன.

சோபிநாத் சுவன் 10 ஓவர்கள் பந்து வீசி 1 ஓட்டமற்ற ஓவருடன் 24 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் பவகுகன் 7 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 16 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

எட்டு விக்கெட்டுக்களால் யூனியன் வெற்றி

வலி.வடக்கு, ஜூலை 28

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் 15 வயதுப் பிரிவினர்களுக்கான ஆட்டமொன்றில் யூனியன் கல்லூரி 08 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணியும் மோதிக் கொண்டன

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி 32.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அன்று இரண்டு நான்குகளுடன் 14, ஜோகீதன் ஐந்து நான்குகளுடன் 25, கௌசிகன் 12 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 28 ஓட்டங்கள் பெறப்பட்டன.

யூனியன் கல்லூரி சார்பில் பந்து வீசிய சுலோஜன் 7.1 ஓவர்களில் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 09 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் பானுசன் 10 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 30 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் இராகுலன் 04 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 04 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், சுகீசன் 04 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 09 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

114 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி இலக்கு என்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யூனியன் கல்லூரி 31.1 ஓவரில் 02விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 117 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

அனுசியன் ஐந்து நான்குகளுடன் 25, கௌதமன் மூன்று நான்குகளுடன் 22, சுலோஜன் ஆட்டமிழக்காது 15 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 52 ஓட்டங்களும் பெறப்பட்டன.

களை கட்டுகிறது பாடசாலைகளின் கிரிக்கெட் கொண்டாட்டம்
துடியன்

கஜானன் ஓர் ஓவர் பந்து வீசி 03 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வில்சன் 10 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 25 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

சென்.ஜோன்ஸை வென்றது சென்றல்

வலி.வடக்கு, ஜூலை 28

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தி வரும் 15 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல் லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுக்களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

தனோஜன் ஆட்டமிழக்காது 41, கோகுலன் 26, சபேஸ் 21 ஓட்டங்களைப் பெற்றார்கள்.

கவாஸ்கர், சபேசன் முறையே 10 ஓவர்கள் பந்து வீசி இரண்டு ஓட்டமற்ற ஓவர்களுடன் 28 ஓட்டங்களைக் கொடுத்து தலா 03 விட்கெட்டுக்களைக் கைப்பற்றினார்கள்.

வில்சன் 08 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 23 ஓட்டங்களுக்கு ஒரு விட்கெட்டையும், கஜானன் 07 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

230 ஓட்டங்கள் என்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்.ஜேன்ஸ் கல்லூரி 'பி' அணி31.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 157 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

சபேசன் 27 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்.

தனுசன் 09 ஓவர்கள் பந்து வீசி இரண்டு ஓட்டமற்ற ஓவர்களுடன் 11 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும், கோகுலன் 07 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டங்களுக்கு 02 விட்கெட்டுக்களையும் ஹரிகரன் 10 ஓவர்கள் பந்து வீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 26 ஓட்டங்களுக்கு 02 விட்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

உருப்பிடியை 80 ஓட்டங்களால் தெல்லிப்பழை மகாஜனா வென்றது

மோசிகீரன் 72 ஓட்டங்களை விளாசினார் மதுசன் 5 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் 15 வயதுப் பிரிவினருனக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஆட்டமொன்றில் மகாஜனாக் கல்லூரி 80 ஓட்டங்களினால் வெற்றிபெற்றுள்ளது.

தொல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்ட மொன்றில் மகாஜனாக் கல்லூரியும் உடுப்பிட்டி அமெரிக்கமிசன் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்படுத்தாடிய மகாஜனாக் கல்லூரி 49 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 175 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

மோசிகீரன் பதினொரு ஓவர்களுடன் 72, டிலக்சன் மூன்று ஓவர்களுடன் 22, நிதர்சன் 10 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 44 ஓட்டங்களும் பெறப்பட்டன. பிரசாத் 10 ஓவர்கள் பந்து வீசி 05 ஓட்டமற்ற ஓவர்களுடன் 20 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும், குகன் சன் 10 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 29 ஓட்டங்களுக்கு 02 விக் கெட்டுக்களையும் கோபிராஜ் 09 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 44 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், பிரதீபன் 05 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

176 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்படுத்தாடக் களமிறங்கிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி 26.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 95 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண் டது.

நேசவிந் தன்இரண்டு ஓவர்களுடன் 23, குகன் சன், செந்தூரன் தலா 10 ஓட்டங்களை பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 32 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள். பந்து வீசிய மதுசன் 10 ஓவர்கள் பந்து வீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 29 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுக்களையும், பிரசாந் 05 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 16 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், திலக்சன் 2.3 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், மோசிகீரன் 06 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

குட்டிநாட்டு விளையாட்டு அரங்குகளில்

இன்றைய ஆட்டம்

வலி.வடக்கு, ஜூலை 28

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்திவரும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 4 மணியளவில் குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் அரையிறுதி ஆட்டங்க ளில் கலந்துகொள்ளவுள்ள கழகங்களின் விவ ரங்கள் வருமாறு:

* உரும்பிராய் சென்.மைக்கல் வி.க. 'ஏ' அணி எதிர் நாவாந்துறை சென் நீக் கிளஸ்'' வி.க. 'ஏ' அணி.

குருநகர் பாடுமீன் வி.க. 'ஏ'அணி எதிர் குருநகர் பாடுமீன் வி.க. 'பி' அணி (1-86)

வலி-கிழக்கு பிரதேசசபையின் ஏற்பாட்டில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 28

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.கிழக்கு (புத்தூர்) பிரதேச சபை பாரம்பரிய விளையாட்டுக்களை மாவட்ட மட்டத்தில் நடத்தவுள்ளது.

13 பிரதேச சபைகள், 3 நகரசபைகள் ஒரு மாநகரசபை உட்பட 17 உள்ளூராட்சி சபை அலுவலர்கள் (ஆண் - பெண் இரு பாலாரும்) பங்குபற்ற கூடியதாகப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

வலி.கிழக்கு பிரதேச சபை செயலாளர் த.தம்பிராசா இதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளனர்.

* தயிர்ப்பானை உடைத்தல் - தலா 4 பேர்
* தலையணைச் சண்டை- மூன்றுபேர்
* சாக்கு ஓட்டம் - தலா நான்குபேர்
* கிடுகுபின்னுதல் - தலா நான்குபேர்
* 1500 மீற்றர் ஓட்டம் - நான்குபேர்
* வினோதஉடை - தலாமூன்றுபேர்
* கயிறுஇழுத்தல்- ஆண்6பேர்,பெண்6பேர்

ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளில் இருந்து பங்குபற்றும் வீரர்களின் பெயர், தே.அ.இலக்கம், கையொப்பம் ஆகிய விபரத்தை குறிப்பிட்டு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு செயலாளர் கேட்டுள்ளார்.

வலி.தென்மேற்கில் கரம், கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஜூலை 28

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு உள்ளூராட்சி சபை ஊழியர்கள் இடையே மென்பந்து கிரிக்கெட், கரம் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

வலி.தென்மேற்கு பிரதேசசபை செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் இதற்கான நடவடிக்கை எடுத்துள்ளார்.

போட்டிகளில் பங்குபற்றும் உள்ளூராட்சி சபை வீரர்கள் பெயர் விவரங்களை சபைச் செயலாளர் ஊடாக அனுப்பி வைக்குமாறு கோரியுள்ளார். (1-95)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைநலன் பாராட்டு



சேவைச்செம்மல்

திரு.ச.செல்வச்சந்திரன்

(இளைப்பாறிய அதிபர், யா/எழுதுமட்டுவாழ் அ.த.க.பா)

சேவை விவரம்

ஆசிரியர் சேவை

அ/நெல்லியகம மு.வி., கெக்கிராவ	10.02.1972 - 20.05.1973
கிளி/இராமநாதபுரம் ம.வி., கிளிநொச்சி	21.05.1973 - 15.09.1975
கிளி/புனித திரேசா ம.வி.	16.09.1975 - 15.02.1976
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை, கிளிநொச்சி	16.02.1976 - 08.01.1978
பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை	09.01.1978 - 31.12.1979
மாத்/பறக்காமுறை மு.வி., மாத்தளை	01.01.1980 - 31.01.1982
யா/உசன் இராமநாதன் ம.வி., மிருசுவில் (உப அதிபர்)	01.01.1982 - 31.05.1993
யா/எழுதுமட்டுவாழ் அ.த.க.பா., எழுதுமட்டுவாழ்	01.06.1993 - 07.03.1996
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., கொடிகாமம்	08.03.1996 - 04.11.1996
யா/மிருசுவில் அ.த.க.பா., மிருசுவில்	05.11.1996 - 15.02.1998

அதிபர் சேவை

யா/எழுதுமட்டுவாழ் அ.த.க.பா., எழுதுமட்டுவாழ்	16.02.1998 -14.04.2008

பல்துறை விற்பன்னர்

யா/எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலையின் அதிபராக இருந்து 14.04.2008 அன்று தனது உடல்நிலை காரணமாக 59ஆவது வயதில் ஓய்வுபெற்ற திரு.சந்திரசேகரம்பிள்ளை செல்வச்சந்திரன் அவர்களின் சேவைநலன் பாராட்டுச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். வடமராட்சியின் உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தைப் புகுந்த இடமாகவும் கொண்டஅவர் ஒருசிறந்தகணித ஆசானாவார். எந்த மாணவரையும் அவரின் இயலுமை, இயலாமைகளின் அடிப்படையில் கணித பாடத்தில் சித்தியடையச் செய்யச் செய்யும் வல்லமை படைத்தவர். அவரால் பயன் பெற்று இன்று பல்துறை விற்பன்னர்களாக உள்ளோர் பலர். போரனர்த்தம் காரணமாக மக்களும் பாடசாலையும் இடம் பெயர்ந்தபோது பாடசாலையை வெவ்வேறிடங்களில் இயக்கி கல்விப் பணியை இடையறாது மேற்கொண்டார்.

எதிர்பாராத விபத்துக் காரணமாக அவர்தம்பணியை இடைநிறுத்தி ஓய்வுபெற வேண்டி ஏற்பட்டபோதும், அவர் சமூகத்துக்குத் தம்பணியைத் தொடர்வாரென்பதில் எவ்வித ஐயமுமில்லை. அவர்தம் ஓய்வுகாலத்தில் எல்லாச் செல்வங்களையும் பெற்றுச் சீருஞ் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுன்றேன்.

கு.பிறேமகாந்தன்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.
(75636)

சிறந்த கணித ஆசான்

சேவையிலிருந்து 14.04.2008இல் ஓய்வு பெற்ற யா/எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலை அதிபர் திரு.சந்திரசேகரம்பிள்ளை செல்வச்சந்திரனின் சேவைநயப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு.செல்வச்சந்திரன் சிறந்த கணித ஆசான். யா/உசன் இராமநாதன் ம.வி., யா/எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலை போன்ற பாடசாலைகளின் மாணவர்களது கணித பாட அடைவை மேம்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர். மாணவப்பருவத்தில் சிறந்த விளையாட்டுவீரனாக விளங்கியவர்.

தனது பாடசாலை போர்ச்சூழலால் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ளபோதும் மாணவர் நலன்கருதி யாழ்மிருசுவில் நோ.க.த.க. பாடசாலையுடன் இணைந்து பாடசாலையை இயக்கிய பெருமைக்குரியவர்.

கடந்த பத்து ஆண்டுகளாக அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு.செல்வச்சந்திரன் எல்லா நலமும் பெற்று குடும்பத்தாருடன் நீண்டகாலம் வளமுடன் வாழ எல்லாம் வல்ல இறைவன் துணை நிற்பாராக.

நாடாதிபாநாதன்,
கோட்டக்கல்வி அலுவலர், சாவகச்சேரி.

சாதனை நாயகன்

எமது பாடசாலையின் முன்னாள் அதிபர் திரு.ச.செல்வச்சந்திரன் அவர்கள் கடந்த மூப்பு ஆண்டுகளுக்கு மேலாக தென்மராட்சி கிழக்குப் பாடசாலைகள் பலவற்றில் தலைசிறந்த கணித பாட ஆசிரியராகவும் விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியராகவும் கடமையாற்றி மாணவர் பலரின் உயர்ச்சிக்கு வித்திட்டவர். எமது பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் பாடசாலையின் அபிவிருத்தியை சகல துறைகளிலும் முன்னோக்கி நகர்த்தியவர். சமூகத்திற்கும் சாலச் சிறந்த தலைமைத்துவத்தை வழங்கி அனைவரின் அபிமானத்தையும் பெற்றவர். எம் பாடசாலை இடப்பெயர்வுகளை சந்தித்தவேளையிலும் இடர்களைத் தாண்டி பாடசாலையின் இருப்பை நிலை நாட்டியவர். உடல் வலுவையும் மிஞ்சிய அவரது அர்ப்பணிப்புமிகு சேவையின்போது ஏற்பட்ட விபத்து அவரை சேவையிலிருந்து ஓய்வுபெற நிர்ப்பந்தித்துள்ளமை எம் மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் ஏற்பட்ட பெரும் பின்னடைவாகும். அவர் வாழ்வு சிறக்க இத்தருணத்தில் வாழ்த்துகின்றேன்.

திரு.க.கணேந்திரன்,
பதில் அதிபர், யா/எழுதுமட்டுவாழ்

வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் யா/எழுதுமட்டுவாழ் அ.த.க.பா.

மொறட்டுவப் பல்கலைக்கழக தொழில்நுட்ப டிப்ளோமாக் கற்கைநெறிக்கு அனுமதி பரீட்சைகள் யாழில்

யாழ்ப்பாணம், ஜூலை 28

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப டிப்ளோமாக் கற்கைநெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான உளச்சார்புப் பரீட்சை யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சை எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

பரீட்சை அனுமதி அட்டைகள் மாணவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுமென மொறட்டுவப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவனப் பணிப்பாளர் தெரிவித்தார். (202)

வடமராட்சி கிழக்கில் விலங்கு விசர்நோய் தடுப்பு நடவடிக்கை

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் விலங்கு விசர் நோய் தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நாளை பிற்பகல் 2 மணிக்கு குடத்தனை மேற்கு பொது நூலகத்தில் பருத்தித்துறை கால்நடை வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் எஸ்.வசீகரன் தலைமையிலான குழுவினர் தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பர். (202)

சிக்கன மின்குமிழ்

60%-80% வரையான மின்சார சிக்கனத்தை ஏற்படுத்தும் உத்தரவாதத்துடன் கூடிய மின் குமிழ்களை (Energy Saving Bulbs) எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

Digital Electronics
205/7, Raja Theatre Complex,
Kasthuriar Road, Jaffna.

dialog TATA sky

புதிய இணைப்பிற்கும் கட்டணங்கள் செலுத்துவதற்கும்

SATS - TECH
(TRCSL அனுமதிபெற்ற நிறுவனம்)
Dial : 021 222 5908,
222 8812, 0777 710785

கசிப்பு வைத்திருந்த இருவருக்கு அபராதம்

சட்ட விரோத கசிப்பு வைத்திருந்த இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 75 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை மதுவரித் திணைக்கத்தினர் கொடிகாமத்தைச் சேர்ந்த இருவருக்கெதிராக கசிப்பு வைத்திருந்ததாக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இவ் வழக்குகளை கடந்த வெள்ளிக்கிழமை விசாரித்த நீதிவான் ஒன்றரை லீற்றர் கசிப்பு வைத்திருந்த நபருக்கு 45 ஆயிரம் ரூபாவும் ஒரு லீற்றர் கசிப்பு வைத்திருந்த நபருக்கு 30 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்தார். (202-207)

ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை28

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 6ஆம், 7ஆம் திகதிகளில் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து வகுப்புகளிலும் கற்பிக்கும் ஆங்கில ஆசிரியர்களை செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் பிறேமகாந்தன் கேட்டுள்ளார். (202-207)

பாதிப்புற்ற சிறுவர்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன

நவாலி, ஜூலை 28

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள உடல், உளப் பாதிப்புற்ற சிறுவர்களின் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

கிராம சேவையாளர்களின் உதவியோடு சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் இந்த விவரங்களை சேகரித்து வருகின்றனர். (202-100)

கலந்துரையாடல்

நல்லூர் கந்தசாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். மாநகர சபையில் மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ தலைமையில் நடைபெறவுள்ளது. (202)

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1005 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

03 26 31 38

கடகம்

25-07-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 5846567 - 5863295

ஜக்பொட் பரிசு ரூபா. 4,956,450/- வெல்லப்படவில்லை

இணையும் இலக்கங்கள்	வெற்றியாளர் எண்ணிக்கை	பரிசுத் தொகை	மொத்தம்
1 இலக்கம்	363,076	10/-	3,630,760/-
2 இலக்கங்கள்	33,303	20/-	666,060/-
1 இல. + லக்கினம்	33,082	30/-	992,460/-
2 இல. + லக்கினம்	3,022	100/-	302,200/-
3 இலக்கங்கள்	872	500/-	436,000/-
3 இல. + லக்கினம்	92	5,000/-	460,000/
4 இலக்கங்கள்	5	100,000/-	500,000/-
4 இல. + லக்கினம்	-	4,956,450/-	-
மொத்தம்			6,987,480/-
வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு	5	100,000/-	500,000/-
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை	433,457		7,487,480/-

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,767,200/-

தொடர் இலக்கம் 4962654 க்கு மேற்பட்ட தீர்க்க நீர்க் டிக்கட்டுக்கள் 2008 ஜூலை 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

கொழும்பு	5856941-2-86
இரத்தினபுரி	5850042-3-83
நுவரெலியா	5847619-9-30
கண்டி	5854567-9-16
மாத்தறை	5848528-0-87

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

35 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
24.11.1983

உதிர்வு
24.06.2008

அமரர் காசிநாதர் பிரசாத் (குஞ்சன்)

(விளையாட்டு விஞ்ஞான அலகு 3ஆம் வருடம், யாழ்.பல்கலைக்கழகம்)

காலன் செய்த சதியினால்
பாதியிலே பறந்தாயோ விண்ணுலகிற்கு
நாங்கள் பரிதவிக்கின்றோம் மண்ணுலகில்
தீராதடா எம் துயரம்!

இன்று (28.07.2008) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குருந்தடி தோட்டம்,
காரைவராய மத்தி, கரவெட்டி. (கி/553918)

உன் பிரிவால் கலங்கி வாடித் தவிக்கும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும்

புலமைப் பரிசில் பரீட்சை

மாதிரி வினாப்பத்திரம்

திரு.எஸ்.கணேசலிங்கம் - திருமலை.

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்க வேண்டும்.

புள்ளிகள்	
பக்கம் 1	
பக்கம் 2	
பக்கம் 3	
பக்கம் 4	
மொத்தம்	

I. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

குரங்குக் கூட்டம் தோப்பு ஒன்றில்
குடியிருக்குதாம் - அவை
கும்பலாகக் கூடிக் கூடிக்
கூத்தடிக்குதாம்

குட்டிக் குரங்கின் வாலை பிடித்துச்
சுழற்றி அடிக்குதாம் - அது
வெட்டித் தனமாய்ப் போடும் சத்தம்
காதைத் துளைக்குதாம்

மரங்கள் தோறும் கிளைகள் தோறும்
மகிழ்ந்து தாவுதாம் - அவை
மறதியாகச் சேட்டை செய்தே
பல்லை இளிக்குதாம்

கெட்டிக்காரத் தோட்டக் காரன்
தடியால் துரத்தவே - குரங்குக்
கூட்ட மெல்லாம் கத்திக் கொண்டு
மரத்தில் ஏறுதாம்

1. இப்பாடலுக்கு பொருத்தமான தலைப்பு ஒன்று எழுதுக.

.....

2. தோட்டக்காரன் குரங்கைத் துரத்தியது ஏன்?

.....

3. மானை பிளிறும் போல குரங்கு .....

.....

4. குரங்கு கிளைக்குக் கிளை தாவுவதற்கு சமநிலை பேண உதவுவது எது?

.....

பின்வரும் சொற்களின் ஒத்த கருத்துச் சொல்லை பாடல் வரிகளிலிருந்து எழுதுக.

5. வானரம் ..... 6. செருக்கு .....

7. சினைப் பெயர்ச் சொற்கள் இரண்டு பாடலில் இருந்து தெரிவு செய்து எழுதுக.

.....

8. இடப் பெயர்ச் சொல் ஒன்றை பாடலில் இருந்து தெரிவு செய்து எழுதுக.

.....

9. உயர் திணைப் படர்க்கை பெயர் சொல் ஒன்று எழுதுக.

.....

10. அடுக்குத் தொடர் ஒன்று எழுதுக.

.....

II. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

1. தவறவிட்ட / அழுதாள்/ தனது / சிறுமி / தாயைத்/ வெதும்பி / மனம்

.....

2. கை / கல்லாதது / கற்றது / உலகளவு / மண்ணளவு

.....

III. வெற்றிடத்துக்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

1. வழிபாட்டிடங்களில் ..... துப்பக் கூடாது (உமிள்நீர், உமிழ்வீர், உமிழ்நீர்)
2. குற்றம் செய்தவர்களுக்கு .....உறுத்திக் கொண்டே இருக்கும் (மனசாட்சி, மனைச்சாட்சி, மனச்சாட்சி)

IV. பின்வரும் குறியீடுகளின் பெயர்களை எழுதுக.

1. ; ..... 2. ; .....

V. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லின் கீழ் கீறிடுக.

1. Cut a piece of ..... (tree. flower. cloth)

VI. பின்வரும் சிங்களச் சொற்கள் குறிக்கும் கருத்தைத் தமிழில் எழுதுக.

1. புஞ்சி மல்லி புஞ்சி மல்லி .....
2. நிதிமததோ நிதிமததோ ..... (02 புள்ளிகள்)

VII. படத்தில் உள்ள பொருட்கள் குறிப்பதை ஆங்கிலத்தில் எழுதுக.

A. .....

B. ..... (02 புள்ளிகள்)

VIII. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. ஒருவர் சரியான கொண்மிலையில் நடக்க இடையூறாக அமையாதது.
1. இறுக்கமான பாதணிகள் 2. பெரிய பாதணிகள் 3. அளவான பாதணிகள் 4. அளவற்ற பாதணிகள்

2. சமையலறைக் கழிவுகளில் பூமரங்களுக்கு உரமாகப் பயன்படுத்தக் கூடிய தொகுதி
1. முட்டைக்கோது, தேயிலைக்கட்டை, தேசிக்காய் கோது
2. சாம்பல், தேயிலைக்கட்டை, வாழைப்பழத்தோல்
3. முட்டைக்கோது, தேயிலைக்கட்டை, வெங்காயத்தோல்.
4. முட்டைக்கோது, சிரட்டை, தும்பு

3. அபாகஸ் என்பது
1. ஒரு வகைத் தொற்று நோய்க்கிருமி 3. ஒரு வகைத் தாவரம்
2. மனக்கணிதச் செய்கை முறை 4. ஒரு நீர் வாழ் உயிரினம்

4. பின்வருனவற்றில் நோய்க் காவிகள்
1. எறும்பு + நுளம்பு 2. வீட்டு ந + தேனி 3. நுளம்பு + வீட்டு 4. நாய் + எறும்பு

5. கறிக்குத் தேசிக்காய்ப்புளி விடுவதற்கு மிகச் சரியான முறை.
1. கறி அடுப்பில் நன்றாக அவிந்து கொண்டிருக்கும் போது 3. கறியை அடுப்பிலிருந்து இறக்கிய பின்
2. கறியை அடுப்பில் வைக்கும் போது 4. மேற்கூறிய யாவும் சரி

6. கரப்பந்தாட்டம் விளையாட்டுத்திடல்
1. சதுர வடிவமானது 2. செவ்வக வடிவமானது 3. வட்ட வடிவமானது 4. நீள் வட்ட வடிவமானது

7. சீருடை அணிபவர்களைக் கொண்ட தொகுதி
1. மாணவர் - ஆசிரியர் – எழுதுவினைஞர். 3. மாணவர் - தாதி – காவல் துறையினர்
2. வைத்தியர் - தாதி – முகாமையாளர் 4. மாணவர் - அதிபர் – அறிவிப்பாளர்

8. பின்வருவனவற்றில் ஒளி புகக்கூடிய பொருட்களைக் கொண்ட தொகுதி
1. நீர், மரம், கவர், ஒடு 2. வலி, பலகை, பிளாஸ்ரிக், கடதாசி
3. நீர், கண்ணாடி, வலி, ரிசுகடதாசி 4. புத்தகம், கண்ணாடி, காற்று, நீர்ப்பொத்தல்

9. ஒரு வருடத்தில் உள்ள வாரங்களின் எண்ணிக்கை
1. 48 வாரம் 2. 50 வாரம் 3. 52 வாரம் 4. 47 வாரம்

10. இலங்கையில் இரட்டைப் புகையிரதப் பாதை மார்க்கம்
1. கொழும்பு – கண்டி 2. கொழும்பு – பொல்ஹாவெல
3. கொழும்பு – வவுனியா 4. கண்டி – பதுளை

11. நீர் வெறுப்பு நோயைப் பரப்பும் நாய் பற்றிய சில தகவல்களை மாணவனொருவனால் முன்வைக்கப்படுகிறது இவற்றுள் மிகச் சரியானவற்றைக் குறிக்கும் ஆங்கில எழுத்துத் தொகுதியை தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.
A. நீரைக் கண்டால் ஓடும்
B. மனிதர்களைக் கண்டால் கடிக்க வரும்
C. நீளமுடி ஏனைய உணவுகளையும் விரும்பிச் சாப்பிடும்.
D. வால் கீழ் நோக்கி காணப்படும்.
E. வாயிலிருந்த நீர் வடிந்த படி சமநிலையற்று நடக்கும்
1. A,D,E 2. C,B,A 3. A,E,C 4. B,D,E,A

12. மஞ்சட் காமாலை நோய் பரவுவது
1. நுளம்பு 2. இலையான் 3. நீர் 4. காற்று

13. சாடி யொன்றில் அடியில் இடவேண்டியது.
1. களிமண் 2. செங்கட்டித் துண்டு 3. கூட்டெரு 4. யூரியா

14. பின்வரும் உபகரணங்களில காற்றின் பயன்பாடு தேவையானது
1. பாய்க்கப்பல் - கார் - புகையிரதம்
2. சுழல் வளி இயந்திரம் - மருந்து தெளிகருவி – உலங்குவானூர்தி
3. பாய்க் கப்பல் - சுழற்வளி - இயந்திரம் - வண்டில்
4. கார் - புகையிரதம் - பேருந்து – கப்பல்

15. சீனப்பட்டம் தயாரிக்கத் தேவையான பொருட்கள்
1. நூல், சிறிய வளையம், ரிசுக்கடதாசி 2. நூல், சர்க்கரை, பசை
3. நூல், கம்பி, தகரம் 4. பலகை, கம்பி, பசை, ரிசு

16. ஊசித்துளைக் கமராவினூடாக ஒரு மரத்தைப் பார்க்கும் போது
1. அது நலைகீழாகத் தெரியும் 2. அது சிறிதாக தெரியும்.
3. அது பெரிதாகத் தெரியும் 4. அப்படியே மாற்றமின்றித் தெரியும்

17. மேலே கட்டப்பட்ட உடுக்கோலத்துக்கு வழங்கும் பெயர் யாது ?
1. தேன்சிலுவை 2. கலப்பை 3. கார்த்திகை 4. ஓராயன்

18. மின்குளிற்குப் பயன்படுத்தும் மின்கலம்
1. உலர் மின்கலம் 2. சேமிப்பு மின்கலம்
3. சூரிய மின்கலம் 4. மேற்கூறிய எல்லாம்

19. தேசப் படத்தில் மாகாண எல்லையைக் குறிப்பது. பின்வருவனவற்றுள் எது
1. +-.-+-.-+-.-+-.-+-- 2. +. .+. .+. .+. . 3. -. .-. .-. .-. . 4. ----------

20. வித்து முளைத்தலுக்கு அவசியமற்றது
1. நீர் 2. வளி 3. சூரிய ஒளி 4. வெப்பம்

IX. பின்வரும் படங்கள் எவற்றைக் குறிக்கின்றன என எழுதுக.

21.  .....

22.  .....

23.  .....

24.  .....

X. அருகிலுள்ள பரிசோதனையின் முடிவுகளைக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.



25. எங்கிருக்கும் எலி இறக்கும்
.....

26. அதற்குரிய காரணம் என்ன.?
.....

27. இப்பரிசோனையின் முடிவு என்ன?
.....

XI. கீழே சில பிராணிகளின் காட்டுப் படங்கள் உள்ளன. அவற்றை இனங்கண்டு எழுதுக.

28. .....

29. .....

30. .....

31. .....

XII. ஓர் ஆரம்ப பாடசாலையிலிருந்து கடந்த நான்கு வருடங்களில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெற்ற மாணவர்களின் விபரம் அட்டவணை காட்டுகிறது.

	பரீட்சைக்குத் தோற்றியோர்		சித்தி பெற்றோர்	
வருடம்	ஆண்	பெண்	ஆண்	பெண்
2002	40	45	25	30
2003	40	30	10	15
2004	50	60	30	25
2005	65	60	20	35
2006	60	50	15	25

1. கடந்த ஐந்து வருடங்களிலும் சித்தி பெறத் தவறிய மாணவர்கள் எத்தனை பேர்?
.....

2. கடைசி மூன்று வருடங்களிலும் சித்தி பெற்ற மாணவர்கள் மொத்தம் எத்தனை பேர்?
.....

3. இருபாலாரும் சம எண்ணிக்கையில் சித்தி பெறத் தவறிய வருடம் எது? .....

4. கடந்த ஐந்து வருடங்களிலும் கூடுதலாக சித்தியடைந்தது ஆண்களா? / பெண்களா?
.....

5. 2004 / 2005 ஆண்டுகளில் சித்தி பெற்றவர்களின் அடிப்படையில் சிறந்த பெறுபேறு கிடைத்த ஆண்டு எது?
.....

6. கடந்த நான்கு வருடங்களிலும் பரீட்சையில் சித்தி பெற்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கையை நிரல் வரைபில் குறித்துக் காட்டுக.



XIII.

1. தொழும்பு, காலி, வீதியில் 187, 141, 63ம் இலக்க வீடுகள் வலப்பக்கமாகவும் 200, 46, 98 இலக்க வீடுகள் இடப்பக்கமாகவும் இருந்தன. எனின் 199 இலக்க கடைத்தொகுதி காலி வீதியின் எப்பகமாக இருக்கும்.
.....

2. இரு பெட்டியில் 763 சவர்க்காரங்கள் உள்ளன. வாரத்திற்கு ஒரு சவர்காரம் வீதம் விடை துலைக்கப் போதுமானது எனின் எத்தனை வாரங்களுக்கு இச்சவர்க்காரங்கள் போதுமானது.
.....

3. இவ்வரு ஒவ்வொன்றும் 16 சதர மீற்றர் பரப்பளவுள்ள மூன்று சதுரங்களால் உருவாக்கப்பட்டது எனின் இவ்வருவின் சுற்றளவு என்ன?
.....



4. இவ்வுருவில் உள்ள செல்வகங்கள் எத்தனை?
.....

5. கூட்டுக. $^{5}/_{12} + {}^{3}/_{6} =$ .....

6. இரவு 9.00 மணிக்கு ஆரம்பித்த கிரிக்கட் போட்டி 3 மணித்தியாலம் 45 நிமிடங்களில் முடிவடைந்தது கிரிக்கட் போட்டி முடிந்த நேரத்தை பிழையற்ல நேரமாக எழுதுக.
.....



7. அருகில் காட்டப்பட்டுள்ள உருவில் உள்ள செங்கோண முக்கோணிகள் எத்தனை என எழுதுக.
.....

XIV. எமது நாடு அந்நிய நாட்டவர்களிடம் அடிமைப்பட்டுக்கிடந்த காலத்தில் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தலைவர்கள் பலர் உள்ளனர். அவர்களுள் கலாநிதி ஆனந்தக்குமாரகவாமியும் ஒருவராவர். நீர்தாக கலாநிதி ஆனந்தக்குமாரகவாமி என நினைத்து நான்கு சொற்களுக்குக் குறையாத ஆறுவசனங்கள் எழுதுக.

.....

.....

.....

.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு கல்விவலய ஆசிரிய ஆலோசகர் சங்க அனுசரணையுடன் கல்வி வளவாளர் நிலையம் அண்மையில் நடாத்திய

க.பொ.த (உயர்தர) முன்னோடிப் பரீட்சை ஜனாத்தாள்- ஒகஸ்ட், 2008

10 T I

இணைந்த கணிதம்

3 மணித்தியாலங்கள்

இணைந்த கணிதம் - 01

ஆறு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

01. a) $a > o$ ஆகவும் $b^2 - 4ac < 0$ ஆகவும் இருப்பின் $f(x) = ax^2 + bx + c$ என்னும் கோவை x இன் எல்லா மெய்ப்பெறுமானங்களுக்கும் நேரானது எனக் காட்டுக.

$f(x) = 9+2(k+4)x+2kx^2$ $(k \neq 0)$ என்னும் சார்பு x இன் எல்லா மெய்ப்பெறுமானங்களுக்கும் நேராக இருக்குமாறு உள்ள k இன் பெறுமான வீச்சைக் காண்க.

b) $x^2+px+1=0$ என்னும் சமன்பாட்டின் மூலங்கள் α, β ஆகவும் $x2+qx+1=0$ என்னும் சமன்பாட்டின் மூலங்கள் γ, δ ஆகவும் இருப்பின் $(\alpha-\gamma)(\beta-\gamma)(\alpha+\delta)(\beta+\delta) = q^2 - p^2$ என நிறுவுக.

c) $x^3 - \lambda x^2 + \mu x + \gamma$ என்பதை $(x-2)^2(x+1)$ ஆல் வகுக்கும்போது மீதி $5x+6$ ஆகும். λ, μ, γ என்பவற்றைக் காண்க.

02. 1) 5 வீடுகளுக்குரிய கடிதங்களுக்கு சரியாக 5 விலாசம் இடப்பட்ட கடித உறைகள் உண்டு. 5 கடிதங்களும் பிழையான கடித உறைகளில் இடுவதற்கான வழிகளின் எண்ணிக்கையைக் காண்க.

2) $\left[2+\frac{3x}{8}\right]^{10}$ என்பது x இன் ஏறுவலுக்களில் எழுதப்படும் போது 4 ஆம் உறுப்பு அதியுயர் எண்பெறுமதியைக் கொண்டிருப்பின் x இன் பெறுமான வீச்சைக் காண்க.

03. 1) கணிதத் தொகுத்தறிவு முறையினால் n எனும் எல்லா நேர் நிறை எண்களுக்கும், $7^{2n} + (2^{3n-3})(3^{n-1})$ என்பது 25 இனால் சரியாக வகுபடும் எனக் காட்டுக.

2) $x > 1$ ஆக இருக்க, $x + x^2 + x^3 + \ldots\ldots + x^n$ என்பதைக் காண்க.
இதிலிருந்து $1.5 + 2.5^2 + 3.5^3 + \ldots\ldots + n.5^n = \frac{(4n-1)5^{n+1} + 5}{16}$ எனக் காட்டுக.

04. a) Z, Z^1 எனும் சிக்கலெண்கள் ஆகண் வரிப்படத்தில் முறையே A,B எனும் புள்ளிகளால் வகைக்குறிக்கப்படின், $[Z-Z^1] = AB$ எனக் காட்டுக.

b) $Z^2 + 2Z + 10 = 0$ எனும் இருபடிச் சமன்பாட்டின் மூலங்கள் Z_1, Z_2 என்பவற்றைக் காண்க. $(\mathrm{Im} Z_1 > 0)$

1) Z_1 இன் மட்டு, வீச்சம் முறையே r, θ எனின், Z_2 இன் மட்டு, வீச்சம் என்பவற்றை முறையே r,θ இல் தருக.

2) $[Z_1 - Z_2] = 6$ எனக் காட்டுக.

3) $[Z-Z_1] = 6$ ஆகுமாறு $\frac{\pi}{4} \leq \arg(Z-Z_2) \leq \frac{3\pi}{4}$ ஆகுமாறு அமையும் சிக்கலெண்கள் Z ஐ ஆகண் வரிப்படத்தில் வகைக்குறிக்கும் புள்ளிகளைக்கொண்ட பகுதியைக் காட்டுக. இப்பகுதியில் (Z) இழிவாக அமையும் புள்ளியின் சிக்கலெண்ணைத் தருக.

05. a) $y_n = \mathrm{cosec} x \cdot \cot^n x$ எனின், $\frac{dy_n}{dx} + (n+1)y_{n+1} + ny_{n-1} = 0$ எனக் காட்டுக.

b) $x^2 + y^2 - 4xy - 1 = 0$ எனின்,

$(y-2x)\frac{d^2y}{dx^2} + \left[\frac{dy^2}{dx^2}\right] + 1 = 4\frac{dy}{dx}$ எனக் காட்டி,
புள்ளி (1,0) இல் $\frac{dy}{dx}$, $\frac{d^2y}{dx^2}$ பெறுமானங்களைக் காண்க.

c) ஒரு செவ்வட்ட கூம்புப் பாத்திரத்தின் அடி ஆரை 4cm உம் குத்துயரம் 20cm உம் ஆகும். உச்சி கீழே அமையுமாறும், அதன் அச்சு நிலைக்குத்தாக இருக்குமாறும் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. அதனுள் நிரம்ப நீர் உள்ளது. இதனுள் $1.5\mathrm{cm}^3\,\mathrm{s}^{-1}$ வீதத்தில் மெதுவாக நீர்சேர்க்கப்படுகிறது. அதேநேரம் அதன் உச்சியிலுள்ள சிறிய துவாரத்தினூடு $2\mathrm{cm}^3\mathrm{s}^{-1}$ வீதத்தில் நீர் வெளியேறுகின்றது. நீரின் ஆழம் 12cm ஆக இருக்கும்போது உயரமாற்ற வீதத்தைக் காண்க.

06. a) உகந்த பிரதியீட்டைச் செய்து, தொகையிடு.

$\int_0^{\pi} \frac{dx}{5+4\cos x}$ ஐப் பெறுமானம் காண்க.

1) பகுதிகளாகத் தொகையிடலைப் பயன்படுத்தி,

$\int \frac{x \sin^{-1} x}{\sqrt{1-x^2}}\,dx$ ஐக் காண்க.

2) பகுதிப் பின்னங்களைப் பயன்படுத்தி,
$\int \frac{4x}{(x+2)(x^2+4)}$ ஐக் காண்க.

b) x - அச்சுக்கும் $y = 6x - x^2$ என்னும் வளையியிற்கும் இடையிலுள்ள பரப்பளவைக் காண்க.

07. நேர்கோடு ஒன்றின் சமன்பாடு $\frac{x-x_1}{a} = \frac{y-y_1}{b} = \lambda$ ஆகும். $a^2 + b^2 = 1$ ஆகும்போது $[\lambda]$ என்பது (x_1, y_1) என்ற புள்ளியிலிருந்து (x,y) இற்குரிய தூரமாகும் எனக் காட்டுக. சாய்சதுரம் ஒன்றில் $2x - 3y + 8 = 0$, $3x - 2y + 2 = 0$ எனும் அடுத்துள்ள பக்கங்கள் சாய்சதுரத்தில் கூர்ங்கோணம் ஒன்றை ஆக்குகின்றது. இப்பக்கங்கள் இடை வெட்டும் புள்ளியினூடான மூலைவிட்டத்தின் நீளம் $10\sqrt{2}$ அலகுகள் ஆகும். சாய்சதுரம் முற்றாக முதலாம் காற்பகுதியில் அமைந்துள்ளது.
சாய்சதுரத்தின் மற்றைய இரு பக்கங்களினதும் சமன்பாடுகளைக் காண்க.
மற்றைய மூலைவிட்டத்தின் நீளம் யாது?
இதிலிருந்து சாய்சதுரத்தின் பரப்பளவைக் காண்க.

08. $y = mx + c$ எனும் நேர்கோடானது $x^2 + y^2 - 2ax - 4ay - 4a^2 = 0$ எனும் வட்டத்தைத் தொடுவதற்கான நிபந்தனையைக் காண்க. $x^2 + y^2 - 2ax - 4ay - 4a^2 = 0$, $x^2 + y^2 - 3ax + 4ay = 0$ எனும் இரு வட்டங்களும் இடைவெட்டும் எனக்காட்டி பொதுநாணின் நீளத்தைக் காண்க.
இவ்விரு வட்டங்களின் பொதுத் தொடலிகளின் சமன்பாடுகளைக் காண்க.
இதிலிருந்தோ, வேறு வழியிலோ பொதுத் தொடலியின் நீளம் 4a எனக் காட்டுக.

09. a) வழமையான குறியீடுகளுடன் யாதேனும் ஒரு முக்கோணிக்குரிய சைன் நெறியைக் கூறி நிறுவுக.

ஒரு முக்கோணி ABC யிற்குரிய வழக்கான குறிப்பீட்டுடன், $(a+b+c)\left[\tan\frac{A}{2} + \tan\frac{B}{2}\right] = 2C\cot\frac{C}{2}$ என நிறுவுக.

இதிலிருந்து அல்லது வேறுவிதமாக $a+b-\frac{c}{a}+b+c = \tan\frac{A}{2}\tan\frac{B}{2}$ எனக் காட்டுக.

b) $\cos^{-1}x + \cos^{-1}y + \cos^{-1}z = \pi$ எனின், $x^2+y^2+z^2+2xyz = 1$ என நிறுவுக.

இணைந்த கணிதம் - 02

ஆறு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

01. a) ஒரு மோட்டார் வண்டியின் உயர் ஆர்முடுகல் $6\mathrm{ms}^{-1}$ ஆகவும் உயர் அமர்முடுகல் $8\mathrm{ms}^{-1}$ ஆகவும் உள்ளது. மோட்டார் வண்டியின் உயர் வேகம் $48\mathrm{ms}^{-1}$ ஆகும். மட்டமான நேர் வீதியில் ஒரு வண்டியானது ஓய்வில் இருந்து புறப்பட்டு மீண்டும் தரப்பட்ட தூரத்தில் ஓய்விற்கு வருகின்றது. வேக - நேர வரைபுகளைப் பயன்படுத்தி,
1) 189m 2) 336m 3) 606m என்னும் தூரங்களை மோட்டார் வண்டி செல்வதற்கு எடுக்கும் மிகக் குறைந்த நேரங்களைக் காண்க.

b) ஒரு உதை பந்தாட்ட நிகழ்ச்சி ஒன்றிலே A,B என்பவர்கள் ஒரே அணியையும், C என்பவர் எதிரணியையும் சேர்ந்தவர்கள். A யும் B யும் சமாந்தரமாக ஒரே கதி u உடன் ஓடிக்கொண்டிருக்கின்றனர். C என்பவர் இவர்களுக்கு சரி நடுவில் சமாந்தரமாக ஆனால், எதிர்திசையில் 2u என்ற வேகத்துடன் ஓடிவருகின்றார். ஒரு கணத்தில் இம் மூவருக்கும் இடைப்பட்ட தூரங்கள் சமனாக வரும்போது B என்பவருக்குப் பந்து கிடைக்கின்றது. அவர் அப்பந்தை C க்குக் கிடைக்காத A என்பவர் பெறத்தக்க வகையில் மாறா வேகத்துடன் தரையில் பந்து செல்லுமாறு அடிக்கின்றார். பந்து அடிக்கப்பட்ட வேகம் v ஆயின் $v > 2u$ எனக் காட்டுக.

02. a) M கிலோகிராம் திணிவுடைய ஒரு கார் α சாய்வுள்ள சாய்தளத்தில் R நியூற்றன் தடை விசைக்கு எதிராக, மேல்நோக்கி இயங்கும்போது அதன் எஞ்சின் P கிலோவாற்று வலுவில் வேலை செய்கிறது. $1000P = (R + 9.8M\sin\alpha + Mf)V$ எனக் காட்டுக.

இங்கு, அதன் வேகம் $V\mathrm{ms}^{-1}$, ஆர்முடுகல் $f\,\mathrm{ms}^{-2}$, $g = 9.8\mathrm{ms}^{-2}$ ஆகும். $\sin a = \frac{1}{8}$, P=20, R=400, M=500 எனின், காரின் அதி உயர் கதியைக் காண்க. இக்கதியுடன் இயங்கும் போது சடுதியாக எஞ்சினின் வலு 25 கிலோவாற்றாக அதிகரிக்கப்படுகிறது. இந்நிலையில் அதன் ஆர்முடுகல் அண்ணளவாக $\frac{1}{2}\mathrm{ms}^{-2}$ எனக் காட்டுக.

b)



படத்தில் காட்டியவாறு ஒப்பமான கிடைத்தளத்தில் வைக்கப்பட்ட M திணிவுள்ள ஒப்பமான ஆப்பின் கிடை முகத்தின் மீது m_1 திணிவுள்ள P எனும் துணிக்கையும், கிடையுடன் கோணம் θ இல் சாய்ந்துள்ள சாய்முகத்தின் மீது m_2 திணிவுள்ள Q எனும் துணிக்கையும் வைக்கப்பட்டு தொகுதி ஓய்விலிருந்து மெதுவாக விடுவிக்கப்படுகிறது. தொடரும் இயக்கத்தில்,
a) ஆப்பின் ஆர்முடுகல், துணிக்கை P இன் ஆர்முடுகலில் தங்கியிருக்கவில்லை எனவும்,

b) எல்லா தொடுகைகளிலும் உள்ள மறுதாக்கங்களையும் காண்க.

03. 1) A, B என்பன ஒரே கிடை மட்டத்திலமையும் இரு புள்ளிகளாகும். புள்ளி A இலிருந்து ஒரே நேரத்தில் இரு துணிக்கைகள் V எனும் ஒரே கதியில் எறியப்படுகின்றன. இரண்டும் புள்ளி B இற்கூடாக வெவ்வெறு நேரங்கள் t_1, t_2 இல் செல்கின்றன.
$4V^2 = g^2(t_1^2 + t_2^2)$ எனக் காட்டுக.

2) M,m திணிவுள்ள சம அளவிலான ஒப்பமான கோளங்கள் u, v எனும் கதிகளின் எதிர்த் திசைகளில் இயங்கி நேரடியாக மோதுகின்றன. மோதலினால் m திணிவுள்ள கோளம் ஓய்வுக்குக் கொண்டுவரப்படுகின்றது. மீளமைவுக் குணகம் e எனின்,

$\frac{m}{M} = e + (1+e)\frac{u}{v}$ எனக் காட்டுக.

மொத்தலின் பின் M இன் மீது அதன் இயக்கத்தைத் தடுக்குமாறு மாறா விசை பிரயோகிக்கப்படுகிறது. M ஆனது a தூரம் இயங்கியதும் ஓய்வடைகின்றதெனின் அவ்விசையின் பருமன்,
$\frac{Me^2(u+v)^2}{2a}$ எனக் காட்டுக.

(இந்த வினாத்தாளின் தொடர்ச்சி இனியும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச மருத்துவப் பிரிவினர் குடாநாட்டில் முதலுதவிப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை28

சர்வதேச மருத்துவப் பிரிவின் இலங்கை அமைப்பு குடாநாட்டில் உள்ள அம்புலன்ஸ் சேவையினருக்கு முதலுதவிப் பயிற்சி களை வழங்கி வருகின்றது.

அண்மையில் கொழும்பிலிருந்து வருகை தந்த பிரிவின் பிரதி முகாமையாளர் துவான் கமலோன் தலைமையிலான குழுவினர் கொக்குவில் இந்துக் கல்லூரியில் முதலுத விப் பயிற்சிகளை வழங்கினர்.

இப் பயிற்சியில் இலங்கை செஞ்சிலு வைச் சங்க யாழ்.கிளை உறுப்பி னர் கள் 22 பேரும் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் அமைப்பின் தொண்டர்கள் 22 பேரும் கலந்து கொண்டனர்.

பயிற்றுவிப்பாளர் குழுவில் சர்வதேச மருத்துவப் பிரிவு இலங்கை அமைப்பின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் நொமி நாதன், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் எஸ். செல்வரஞ் சன், பயிற்றுவிப்பாளர் றுவான்சாயா ஆகி யோரும் இணைந்திருந்தனர். (202-68)

எழுவைதீவு இலங்கை வங்கிக் கிராமம் அறிமுக விழாவும் விளையாட்டு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஜூலை28

எழுவைதீவு இலங்கை வங்கிக் கிராமம் அறிமுக எழுச்சிவிழாவும் விளையாட்டு விழாவும் இலங்கை வங்கி ஊர்காவற் றுறைக் கிளையின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளன.

இன்று திங்கட்கிழமை எழுவைதீவு பத் திமா விளையாட்டுக் கழக பொது மைதா னத்தில் ஆசிரியர் கி. கியோமர் தலைமை யில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் வட பிராந்திய உத விப் பொதுமுகாமையாளர் பி.ஏ.அருமை நாயகமும் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளை முகாமையாளர் கு. சிவஞானசுந்தரம், ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் க. ஸ்ரீமோ கனன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

மரதன் ஓட்டம், கட்டுமரம் வலித்தல், சிறுவர்களுக்கான போட்டிகள், குறி வைத் தல், கிடுகு பின்னல், தடை ஓட்டம், குடம் வைத்து நடத்தல், கயிறு இழுத்தல், வலைப் பந்தாட்டம் ஆகிய போட்டிகள் நடைபெற வுள்ளன. (202-325)

ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் இம்முறை 2 லட்சத்து 43 ஆயிரம் மாணவர் தோற்றுவர்

அச்சுவேலி, ஜூலை28

எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாக வுள்ள ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் நாட ளாவிய ரீதியில் 2 லட்சத்து 43 ஆயிரத்து 816 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இப் பரீட்சை இரண்டு கட்டங்களாக 22 தினங்களுக்கு நடைபெறவுள்ளது.

ஜி.சி.ஈ. உயதர்தரப் பரீட்சைக்கு பாட சாலை பரீட்சார்த்திகளாக ஒரு லட்சத்து 99 ஆயிரத்து 62 பரீட்சார்த்திகளும் தனிப் பட்ட பரீட்சார்த்திகளாக 44 ஆயிரத்து 754 பேரும் பரீட்சைக்கு தோற்றுகின்றனர்.

இவர்கள் பரீட்சை எழுதுவதற்கு வசதி யாக நாடளாவிய ரீதியில் 1818 பரீட்சை நிலையங்களும் 281 இணைப்பு நிலை யகளும் 32 பிராந்திய இணைப்பு நிலை யங்களும் நிறுவப்பட்டுள்ளன.

பரீட்சைக் கடமைகளுக்கு 11 ஆயிரத் துக்கும் மேற்பட்ட அதிகாரிகள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

ஒகஸ்ட் 6 ஆம் திகதி ஆரம்பமாகும் முத லாம் கட்ட பரீட்சைகள் ஒகஸ்ட் 21 ஆம் திகதி முடிவடையும். 2 ஆம் கட்டமாக ஒகஸ்ட் 25 ஆம் திகதி ஆரம்பமாகி செப்ரெம் பர் 3 ஆம் திகதி வரை நடைபெறும். (202-11)

ஆயர் தியோகுப்பிள்ளை அறக்கொடைப் பேருரை

யாழ்ப்பாணம், ஜூலை28

யாழ். மறை மாவட்ட குருக்கள் ஒன்றி யத்தின் ஏற்பாட்டில் ஆயர் தியோ குப் பிள்ளை அறக்கொடைப் பேருரை நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ். அச்சக வீதியிலுள்ள பாது காவலன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அருட் கலாநிதி நீ. மரிய சேவியர் அடிக ளார் பாலம் அமைத்த பணியாளன் என் னும் தலைப்பில் பேருரை நிகழ்த்துவார். (202)

அரச ஊழியர்களுக்காக

நடமாடும் விற்பனை நிலையம் வாரத்தில் இரு நாள்கள் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஜூலை28

அரசாங்க ஊழியர்களின் வசதி கருதி யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நடமாடும் வர்த்தக விற்பனை நிலையம் வாரம் இரண்டு நாள்கள் நடை பெற்று வருவதாக சங்கத் தலைவர் ப.கிரி தரன் தெரிவித்தார்.

இந்த நடமாடும் நிலையம் கடந்த 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். செயலகத் திலும் மறுநாள் சனிக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையிலும் நடத்தப்பட்டன.

இந்த நடமாடும் கூட்டுறவு விற்பனை நிலையம் ஊடாக யாழ். செயலக ஊழியர்களும் போதனா வைத்தியசாலைப் பணியாளர்க ளும் நியாயவிலையில் போதியளவு அத்தி யாவசிய பொருள்களை கொள் வனவு செய்த தாக சங்கத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

மாதாந்தம் நடைபெறும் இந்த நடமா டும் கூட்டுறவு விற்பனை நிலையம் ஊடாக அரச ஊழியர்கள் தமது அலுவல கங்களில் இருந்தவாறு நியாய விலையில் அத்தியாவசியப் பொருள்களை பெற்றுக் கொள்ளக் கூடிய வசதியை மேற்படி சங்கம் ஏற்படுத்தியமையை அரச பணியாளர்கள் பலர் பாராட்டுகின்றனர். (202-224)

உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் காரைநகரில் புதிய வீடுகள் அமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத் தின் கீழ் காரைநகர் உதவி அரசாங்க அதி

குருதிக் கொடையாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவினர் நடத்தும் குருதிக் கொடை யாளர் கௌரவிப்பு விழா எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பிரதான வீதியிலுள்ள கலைத்தூது கலைய கத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தி னராக யாழ்.மாவட்ட நீதிபதி இ. வசந்த சேனனும் சிறப்பு விருந்தினர்களாக அக வொளி இயக்குநர் அருட்திரு. எஸ்.ஜே. இராஜநாயகம், தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலய தலைவர் ஆறு.திருமுருகன் ஆகியோரும் கலந்துகொள்வர். (202)

பர் பிரிவில் புதிய வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கிராமங்கள் தோறும் கட்டம் கட்டமாக இந்த வீடுகள் அமைக்கும் பணி இடம் பெற்று வருகின்றது.

முதற்கட்டமாக காரைநகர் சிவன்கோயி லடியில் தலா இரண்டு இலட்சத்து ஐம் பதாயிரம் ரூபா செலவில் 15 வீடுகளும் இரண்டாம் கட்டமாக ஊரி, பாலாவோடை நீலங்காடு, ஆயிலி ஆகிய கிராமங்களில் 65 வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் கட்டமாக மருதபுரம், வியாவில், வேதரடைப்பு, விக்காவில், சிவகாமி அம்மன்கோயிலடி, மொத்திபுலம், கொட் டைப்புலம், பயிரிக்கூடல், சத்திரந்தை, பிட்டியெல்லை ஆகிய பத்துக் கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு வீடு அமைக்கும் பணி இடம்பெற்று வருகின்றது.

இக்கிராமங்களில் 125 குடும்பங்களுக்கு தலா மூன்று லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் புதிய வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை கருங்காலி, மல்லிகை, மரு தடி, நெடுங்காடு, பொன்னாவளை ஆகிய கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு நான் காம் கட்ட வீடமைக்கும் பணி ஆரம்பிக்கப் பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-250)

யாழ்.மாநகரசபையில் உள்ள

சிறந்த சனசமூக நிலையங்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்க ஏற்பாடு

நல்லூர், ஜூலை 28

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ். மாநகராட்சி மன்றம் நடத்திய சிறந்த சனசமூக நிலையங்களுக்கான போட்டி யில் வெற்றிபெற்ற நிலையங்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் வியாழக்கிழமை பிற் பகல் 3 மணிக்கு யாழ். மாநகரசபை முன் பள்ளி மைதான அரங்கில் நடை பெறவுள்ளது.

மாநகராட்சிமன்ற சனசமூக நிலையங் களில் சிறந்த சனசமூக நிலையங்களாக தெரிவான ஆறு சனசமூக நிலையங் களும் வருமாறு:-

அரியாலை சனசமூக நிலையம் முத லாம் இடத்தையும், ஸ்ரீகாமாட்சி சனசமூக நிலையம், குருநகர் சனசமூக நிலையம் இரண்டும் இரண்டாம் இடத்தையும் பெற் றுள்ளன.

ஜனசக்தி சனசமூக நிலையம் மூன்றா வது இடத்தையும் ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் நான்காமிடத்தையும் நாவாந் துறை கலை வாணி சனசமூக நிலையம் ஐந்தாம் இடத்தையும் பெற்று பரிசில் களையும் பெற்றன. (202-111-302)

நினைக்கள்ளங்களின் சாரதிகள், பணியாளர்களுக்கு பயிற்சிகள் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச திணைக் களங்களில் கடமை புரியும் மத்திய மாகாண அமைச்சுகளைச் சேர்ந்த சாரதி மற்றும் அலுவலகப்பணியாளர்களுக்கு பயிற்சி கள் வழங்கப்படவுள்ளன.

குறிப்பிட்ட பணியாளர்களின் விவரங்களை யாழ். அரச அதிபர் கே.கணேஸ் கோரியுள்ளார்.

முழுப்பெயர், நியமன வகை, நியமனத் திகதி, பதவி ஆகிய விவரங்களை எதிர்வ ரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட செய லகத்திற்கு அனுப்பி வைக்குமாறு சகல திணைக்களத் தலைவர்களையும் அரச அதிபர் கேட்டுள்ளார்.

மேலதிக விவரங்களை 021 222 2771 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக மாவட்ட செயலக உதவி அரச அதிபரை தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவித்தார். (202)

கல்விக்கண்காட்சி

தீவகவலய முன்பள்ளிக் கல்விப் பிரிவின ரின் ஏற்பாட்டில் நாளையும் நாளை மறுதின மும் வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் கல்விக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. தீவகவலயக் கல் விப் பணிப்பாளர் ஜி.வி. இராதாகிருஸ் ணன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கலை நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக வேலணை பிரதேச செயலர் மு.நந்த கோபாலன் கலந்துகொள்வார். (202-267)

காரைநகர் பிரதேச பாலர் பாடசாலைகளில் கலை நிகழ்வும் கண்காட்சியும் காரைநகர் சைவமகாசபை மண்டபத்தில் நடை பெற்றபோது எடுக்கப் பட்ட படங்கள். நிகழ்வில் கலந்துகொண்ட வர்களில் ஒரு பகுதியினரை படத்திலும் விளிசை நிகழ்வையும் கண் காட் சியில் இடம்பெற்ற சிறுவர்களின் ஆக்கங்களையும் இந்த படங்களில் காணலாம். (250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பிரதேச உள்ளூர் உணவுற்பத்தியின் மேம்பாட்டுக்கு பாடசாலைகளினூடான செயற்பாடு அவசியமானது!

நாம் வாழும் பிரதேசம் சிறந்த முறையில் உணவுற்பத்தியை மேற்கொள்வதற்குரிய பிரதேசமாகும். இங்கு இதற்குரிய வளங்கள் பலவும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. அத்துடன் உணவுற்பத்தி முயற்சிகளில் முக்கியமானதாகக் கருதப்படும் விவசாயத்திற்குப் பொருத்தமான காலநிலையும் நிலவுகிறது. திட்டமிட்ட முறையில் காலநிலை, மக்களின் நுகர்வுத் தேவை, சந்தை நிலைவரம், தொழில்நுட்ப அறிவு என்பவற்றைக் கருத்திற்கொண்டு விவசாய முயற்சியை முன்னெடுக்கும் போது நமக்கு வேண்டிய உணவின் பெரும்பகுதியை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

நாம் சில வருடங்களிற்கு முன்னரே உணவு வழங்கலின் மிகைநிலை ஒன்றிலிருந்து பற்றாக்குறைத் தசாப்தத்திற்குள் நுழைந்துள்ளோம். எமது பிரதேசத்தின் உணவு விநியோகமுறையிலுள்ள சிக்கல் நிலை, தொடர்ச்சியான மோதல் நிலை, விளை நிலங்களில் பயிரிடமுடியாத துர்ப்பாக்கிய நிலை, கடலுணவு வளங்களைப் பெறுவதிலுள்ள சிரமம், அதிக விலையில் எரிபொருள் கொள்வனவு, கடந்த போக காலநிலையில் ஏற்பட்டமாறுதல் போன்றன எமது உணவுற்பத்தியைப் பெரிதும் பாதித்துள்ளன. எனவே இவ்வாறான நிலைகளை வெற்றி கொண்டு எமக்கு வேண்டிய உணவை நாமே உற்பத்தி செய்து தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை உண்டு.

உணவுற்பத்தி முறையிலும், உணவு நுகர்வுக் கோலத்திலும் ஒரு மாறுபாட்டை ஏற்படுத்தி, எதிர்காலத்தில் சுபீட்சம்மிக்க வாழ்வைக்கட்டி எழுப்ப முடியும். இதற்கு பாடசாலைப் பருவ மாணவரையும், பாடசாலை சார்ந்த சமூகத்தையும் சரியான முறையில் வழிப்படுத்தினால் வெற்றியை இலகுவில் அடையமுடியும்.

பாடசாலைகளின் செயற்பாடுகள்

பாடசாலைகள் தோறும் 'விவசாயக் கழகங்கள்' அமைக்கப்பட்டால் அதனூடாக உள்ளூர் உணவுற்பத்தியை துரிதப்படுத்தும் வேலைத்திட்டத்திற்கு உதவமுடியும். பாடசாலையில் விவசாயம் கற்கும் மாணவர் மட்டுமின்றி விருப்புடன் ஈடுபடும் சகல மாணவரையும் கொண்டதாக இக் கழகம் அமைக்கப்பட்டு இதனூடாகக் காலத்திற்குக் காலம் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இதன் மூலம் மாணவர்கள் தமது பிரதேசத்தின் உணவுற்பத்திக்கு தம்மாலியன்ற பங்களிப்பை வழங்க முடியும்.

வாழ்க்கைத்தரம், போசணைமட்டம், பொருளாதாரம் என்பவற்றில் உயர்வடைய உள்ளூர் உணவுற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும்

மாதிரிப் பாடசாலைத் தோட்டம் அமைத்தல்

இன்றைய காலகட்டத்தில் நவீன விவசாய அறிவும் தொழில்நுட்பமும் எமது பிரதேசத்திற்கும் உரித்தாகியுள்ளன. ஆனாலும் இந்த அறிவும் தொழில்நுட்பமும் இன்றும் நமது கிராமிய விவசாயிகளைப் பூரணமாக சென்றடைந்துள்ளது என்று கூறமுடியாது. பாடசாலையில் மாதிரிப் பாடசாலைத் தோட்டத்தை அமைத்து அங்கு மூன்மாதிரியான செயற்பாடுகளில் ஈடுபடும்போது, மாணவர்கள் இவ்வானான நவீன செயற்பாடுகளைத் தாம் உள்வாங்கிக் கொள்வதுடன், தாம் வாழும் சமூகத்திற்கும் பரப்பமுடியும். இதனால் விவசாயிகள் பாரம்பரிய முறைகளிலிருந்து விலகி, நவீன விவசாய முறைமைகளில் நுழைந்து, சிறப்பானதும், சீரானதுமான உணவுற்பத்திக்கு வழிவகை செய்வார்கள்.

மாணவர் மத்தியில் வீட்டுத் தோட்டங்களைப் பிரபல்யப்படுத்துதல்

நாம் வாழும் பிரதேசத்தில் வீட்டுத் தோட்டங்கள் பொதுவானதாகும். நாம் தற்போது எதிர்நோக்கும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, மந்தபோசணை, உணவுப் பேண்தகவின்மை போன்றவற்றிற்கான சிறந்த தீர்வாக வீட்டுத் தோட்டங்களைக் கருதலாம். எனவே தற்போதுள்ள வீட்டுத் தோட்டங்களை மேலும் மேம்படுத்துவதற்கு மாணவரை அதற்கேற்ப கையாண்டு உள்ளூர் உணவுற்பத்திக்குப் போதிய பங்களிப்பை வழங்கலாம்.

மாணவர் மத்தியில் வீட்டுத்தோட்டப் போட்டிகளை நடத்தி வெற்றி பெறுவோருக்கு தகுந்த வெகுமதிகளைக் கொடுப்பதன் மூலம் அவர்களிடையே ஆர்வத்தை மேலும் தூண்டலாம்.

சராசரி மனிதனொருவன் வருடம் ஒன்றிற்கு 74 கி.கிராம் மரக்கறியும் 45 கிலோ கிராம் பழங்களும் உண்ண வேண்டும். ஆனால் இலங்கையில் சராசரி மனிதன் 37 கிலோகிராம் மரக்கறியும் 15 கிலோகிராம் பழங்களையும் உண்கிறான். இங்கு மாணவர் மூலம் வீட்டுத் தோட்டங்களைப் பிரபல்யப்படுத்துவதனால் போசணைத் தேவையின் ஒரு பகுதியையேனும் ஈடுசெய்து கொள்ள முடியும். தகுந்த முறையில் வீட்டுத் தோட்டம் ஒன்றைத் திட்டமிட்டு உருவாக்கிப் பேணுவதன் மூலம், ஒரு குடும்பம் தமது வருமானத்தின் 30% சேமித்துக் கொள்ள முடியும்.

ப.அருந்தவம்,
ஆசிரிய ஆலோசகர்,
வலிகாமம் கல்வி வலயம்.

தமது உணவுத் தேவையின் ஒரு பகுதியை வாழிடத்திலேயே உற்பத்தி செய்வதால், அந்த உற்பத்திப் பொருள் சார்பாகப் பொதியிடல், கொண்டு செல்லல், ஏற்றி இறக்கல், சேமித்தல், விற்பனை செய்தல் போன்ற செயற்பாடுகளின் போதான இழப்புக்களும் தவிர்க்கப்படும். அத்துடன் நமக்கு வேண்டிய உணவை நாமே உற்பத்தி செய்து கொள்வதால் தரமான பொருளை நுகர்வதுடன், இரசாயனங்களால் நஞ்சூட்டப் பெற்றுள்ளதா? எனும் ஐயமின்றி ஆரோக்கியமான உணவு வகைகளையும் பெறமுடியும்.

வீட்டுத் தோட்டம் மாணவனின் சிறந்த பொழுதுபோக்காக அமைவதுடன், அவனுக்கு ஒரு பொருளாதார ஊன்று கோலாகவும் திகழ்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக தனது பிரதேசத்தின் உணவுற் பத்தில் மாணவன் தன்னாலியன்ற பங்களிப் பைச் செய்யும் ஓர் உன்னத முயற்சியாகவும் இது அமையும். *(வளரும்)*

வடமராட்சி வலய மட்டத்தில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டிகளின் முடிவுகள்

கரவெட்டி, ஜூலை25

வடமராட்சி வலய மட்டத்தில் இடம் பெற்ற தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டிகளில் வெற்றியீட்டியோர் விவரம் வருமாறு:-

வாசிப்பு

பிரிவு-1: நிஜோபா ஜெகநாதன்- கரவெட்டி மாணிக்க வித்தி., ஸ்ரீ. துளசியன்-பரு. சித்தி விநாயகர், சிவகுருநாதன் பரணீதரன்-கரணவாய் தாமோதரா வித்தி.

பிரிவு-2: வி.கோபிகா-கெருடாவில் இ.த.பா., தர்சினி நவரத்தினம்-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, தா. கிருஷாலினி- தும்பளை சிவப்பரகாச வித்தி.

ஆக்கத்திறன்வெளிப்பாடு(கதைகூறல்)

பிரிவு-1: நிதுஷா குகநேசன்- கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி., சௌமியா பாஸ்கரன்-வதிரி திரு இருதயக் கல்லூரி, சிவானந்தமூர்த்தி கோகுலன்-நெல்லியடி மெ.மி.த.க.

ஆக்கம் எழுத்து

பிரிவு-1: ச.மதுசுஜா- கெருடாவில் இ.த.க., கு.மாதுமை -மேலைப். சைவப் பிரகாச வித்தி., துளசி அருளானந்தம்-அல்வாய் சின்னத்தம்பி வித்தி.

கட்டுரை வரைதல்

பிரிவு-2: மயூரி கோபிநாத்-மெதடிஸ்த பெ.உ.பா., தர்மினி தனபால சிங்கம்-வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, கருணரூபன்-சிதம்பரக் கல்லூரி.

பிரிவு-3: மாதங்கி மகேந்திரன்- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, தி. சுஜித்திரா- மெதடிஸ்த பெண்கள் பாடசாலை, அ. சுபேதன்-ஹாட்லிக் கல்லூரி, மிதுலா இராஜேந்திரம்-கம்பர்மலை வித்தி.

கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல்

பிரிவு-4: சி. சிவநந்தினி- மெதடிஸ்த பெ.உ.பாடசாலை, சி. அநுரதன்- ஹாட்லிக் கல்லூரி, கமலக்கண்ணன் கமலவாசன்-கம்பர்மலை வித்தி.

தமிழியற்கட்டுரைவரைதல் இலக்கியம் நயத்தல்

பிரிவு-5: பாரதி பொன்னையா-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வித்தியா சண்முகலிங்கம்-ஞானசாரியார் கல்லூரி, த.உதயகுமார்-ஹாட்லிக் கல்லூரி.

இலக்கணப் போட்டி

பிரிவு-4: அனுஷா சுந்தரலிங்கம்-வடஇந்து மகளிர் கல்லூரி, செ.சாருண்யா-மெதடிஸ்த பெ.உ.பா., தனபாலசிங்கம் துவாரகன்- விக்னேஸ்வராக் கல்லூரி.

பிரிவு-5: யாழினி பாலசேகரன்-வடஇந்து மகளிர் கல்லூரி, தே.ஜனனி- மெதடிஸ்த பெ.உ.பா., மயூரதி தியாகராசா- விக்னேஸ்வராக் கல்லூரி.

திறனாய்வு போட்டி

பிரிவு-3: ஜீவனா புஷ்பராசா- விக்னேஸ்வராக் கல்லூரி, ஜெயதர்சினி எட்மன்ட்-ஞானசாரியார் கல்லூரி, ஜேசுதாஸ் உருத்திர மூர்த்தி நிருசா- அம்பன் அ.மி.த.க.பா.

பிரிவு-4: கிருஷாளினி மகான்- நெல்லியடி ம.ம.வி., பர்மிளா சிவானந்தராசா-விக்னேஸ்வராக் கல்லூரி, நிவேதா கணேசலிங்கம்-வடமத்திய மகளிர் கல்லூரி.

குறுநாடக ஆக்கம்

பிரிவு-5: தனுசியா சிவராசா-ஞானசாரியார் கல்லூரி, வி. ஜசிந்தன்-வேலாயுதம் மகாவித்தியாலயம், றம்சிகா இராசரட்ணம்-விக்னேஸ்வராக் கல்லூரி.

கவிதை ஆக்கம்

பிரிவு-4: கமலநாதன் பிரசாந்- ஹாட்லிக் கல்லூரி, உசாந்தினி அழகரத்தினம்-நெல்லியடி ம.ம. வி., விவேகா-கொற்றாவத்தை அ.

பிரிவு-5: பமிலா இராமகிருஷ்ணன்- சிதம்பரக் கல்லூரி, நீதா முத்துராஜா- நெல்லியடி ம.ம.வி., த. வினோதன்- வேலாயுதம் மகாவித்தியாலயம்.

சிறுகதை ஆக்கம்

பிரிவு-4: காயத்திரி மனோகரன்- உடுப்பிட்டி மகளிர், தர்சிகா பத்மநாதன்- மெதடிஸ்த பெ.பா., சிவரூபி ஜெகராஜா-வடஇந்து மகளிர்.

பிரிவு-5: பவுசியா வேல்நாயகம்- அம்பன் அ.மி.த.க., சு. பிரிந்தா மெதடிஸ்த பெ.உ.பா., துர்க்கா ஜெயரட்ணம்-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி. *(வளரும்)*

சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை28

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் ''இதிஹாசங்கள்'' என்னும் தலைப்பில் சைவப்புலவர் பொன். சுகந்தன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக இவர் தொடர் சொற்பொழிவினை ஆற்றிக் கொண்டு வருகின்றமையைக் கௌரவித்து அண்மையில் பேராசியர் அ.சண்முகதாஸினால் ''தமிழ் ஞான வித்தகர்'' எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டதும் குறிப்பிடத்தக்கது. (202

புலிகளின்குரல் கலைஞர் ராணிமைந்தன் வீரச்சாவு

கிளிநொச்சி, ஜூலை28

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிக் கவிஞர் லெப்.கேணல் ராணிமைந்தன் வீரச்சாவடைந்துள்ளார்.

இவர் புலிகளின் குரல் வானொலியின் கலைஞராக இருந்து கவிதை நிகழ்வுகள் உட்பட பல நிகழ்வுகளை நடத்தியதுடன் படைப்பாளராகவும் பணியாற்றினார்.

விடுதலைப் பாடல்கள் சிலவற்றை எழுதியுள்ள இவர் ஒரு சிறந்த பேச்சாளருமாவார்.

தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியிலும் அறிக்கை உள்ளிட்ட பல நிகழ்ச்சிகளை உருவாக்கியுள்ளார்.



கந்தையா ஸ்ரீகந்தவேள் எழுதிய 'தேரார் வீதியில்' நாடக எழுத்துருக்கள் என்னும் நூலின் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

இணுவில் கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந் நிகழ்வில் இலக்கிய வட்டத்தின் தலைவர் த. சிவகுமாரன், ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் முள்ளாள் அதிபர் க.சிவாஜி, நூலாசிரியர் ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதல் மூன்று படங்களிலும், காணலாம்.

மூதறிஞர் சிற்பி சிவசரவணபவன் நூலை வெளியிட்டு வைப்பதை இறுதிப் படத்தில் காணலாம். (55)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

சரிந்து வரும் பொருளாதாரத்தை எப்படிச் சமாளிக்கப் போகிறது அரசு?

'கடன் வாங்கிக் கல்யாணம்' என்பார்கள். அது போன்றே மஹிந்தரின் அரசு நாட்டு விவகாரங்களைக் கொண்டி முத்துக் கொண்டிருக்கின்றது.

'வரவு எட்டணா, செலவு பத்தணா, கடைசியில் துந் தணா! துந்தணா!' - என்பது போல நாட்டின் பொருளா தாரம் இழுபடுகின்றது. சீக்காளி நோயாளிபோல இழுத்துப் பறித்துக் கொண்டு கிடக்கும் இந்தப் பொருளா தாரச் சீர்கேட்டு நிலைமை எத்தனை நாளைக்குத் தாக்குப் பிடிக்கும் என்பதே அவதானிகளின் கேள்வியாகும்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி 'கொதிநிலை'ப் புள்ளியைத் தாண்டி விட்டது என்று குறிப்பிடும் பொரு ளியல் ஆய்வாளர்கள், நாட்டின் அரச ஊழியர்களுக்கு மாதாந்த வேதனத்தைக் கூடக் கொடுக்க முடியாத ஆபத் தான கட்டத்தை நோக்கி நாடு சென்று கொண்டிருப்ப தாக எச்சரித்திருக்கின்றார்கள்.

கண்மூடித்தனமாக - ஊதாரித்தனமாக - எல்லை மீறி அரசு மேற்கொள்ளும் செலவினம் ஏற்கனவே உச்சத் தைத் தொட்டு நிற்கும் பண வீக்கத்தை மேலும் வானளாவ உயர்த்தி விட்டுள்ளது.

இந்த வருட ஆரம்பத்திலிருந்து தீவிரமடைந்து வரும் நிதி நெருக்கடி அரசின் செயற்பாட்டை ஸ்தம் பிக்க வைக்கும் இறுதிக் கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக அபாய ஒலி எழுப்பியிருக்கும் அவர் கள், அதற்கு இனிக் கொஞ்சக் காலம்தான் உள்ளது, அது தவிர்க்க இயலாத விவகாரம் என்றும் ஆரூடம் கூறியிருக் கின்றார்கள்.

ஒரு சின்னக் கணக்கு - வழக்கு மூலம் நாட்டின் பொருளாதாரத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

அரசுக்கான மொத்த வருமானம் 75 ஆயிரம் கோடி ரூபா. அதில் கடன் நிலுவை, வட்டி போன்றவற்றைச் செலுத்துவதற்கு 58 ஆயிரம் கோடி ரூபா செல்வாகிவி டும். எஞ்சுவது 17 ஆயிரம் கோடி ரூபா.

இதில் பாதுகாப்புச் செலவினம் மட்டும் 17 ஆயிரம் கோடி ரூபா என முன்னரே திட்டமிடப்பட்டாகி விட்டது. அது, நடைமுறையில் அத்தொகையையும் தாண்டும் என்பதும் ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டதுதான்.

இதுதான் நிலைமை என்றால் அரசின் ஏனைய செலவினங்களுக்கும் அரச ஊழியர்களுக்கு வேதனம் கொடுக்கவும் அரசு என்ன செய்யப் போகின்றது எனப் பொருளியல் நிபுணர் கலாநிதி ஹர்ஷா டி சில்வா கேள்வி எழுப்புகின்றார்.

மேலதிக செலவுகளைச் சமாளிப்பதற்கு அரசு ஒன் றில் புதிது புதிதாக நோட்டுக் கற்றைகளை அச்சடித்துப் புழக்கத்தில் விட வேண்டும். அல்லது உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்களை வாங்கித் தள்ளவேண்டும்.

இதில் எதைச் செய்தாலும் தற்போது எகிறிக் கொண்டி ருக்கும் பணவீக்கம் இன்னும் கட்டுமட்டில்லாமல் உயரும். அதைத் தடுக்கவோ, தவிர்க்கவோ முடியாமல் போகும் என்கிறார் ஹர்ஷா டி சில்வா.

இந்தச் சீத்துவத்தில் அரச ஊழியர்களுக்குத் தான் அறிவித்த ஆயிரம் ரூபா அலவன்ஸ் அதிகரிப்பையும் அரசு வழங்கப் போகின்றது.

அத்தோடு தான் நடத்தும் 'சார்க்' மாநாட்டு தமாஷா வுக்காக மேலும் ஐந்நூறு கோடி ரூபாவைச் செலவிடு கின்றது அரசு.

போர் வெறித் தீவிரத்தில் துடிக்கும் அரசு தனது முறையற்ற பொருளாதாரக் கொள்கைகளாலும், சீர்கெட்ட ஆட்சி முறையினாலும், வீண், விரய செலவினங்களி னாலும், எல்லை மீறிய அளவுக்கு பாதுகாப்புத் துறைக் குப் பணத்தைக் கொட்டிச் செலவிடுவதனாலும் பொருளாதாரத்தைக் குட்டிச் சுவராக்கி நாட்டை நட்ட நடு வீதிக்குக் கொண்டுவந்திருக்கின்றது.

இத்தகைய தவறான ஆட்சி முறைப் போக்கால் ஏற்பட்டுள்ள மோசமான நெருக்கடிகளை எல்லை மீறிய விலைவாசி உயர்வு என்ற சிக்கலின் ஊடாகப் பட்டறிந்து வெந்தணலில் துடிக்கின்றனர் நாட்டின் பொதுமக்கள்.

ஆனாலும் 'புலிகளை அழித்து வெற்றி கொள்ளுதல்' என்ற மாயமானைக் காட்டி தென்னிலங்கையில் பௌத்த - சிங்களப் பேரினவாதத்தில் மூழ்கிக் கிடக்கும் சிங்கள மக்களைச் சமாளித்துக் காலத்தைக் கொண்டி முக்கின்றது கொழும்பு அரசு.

எனினும், இந்தத் தந்திரோபாயம் எத்தனை நாள்களுக் குத் தாக்குப் பிடிக்கும் என்பதே இன்றைய கேள்வியாகும்.

உள்நாட்டில் வங்கிகளிடமும், வெளிநாட்டில் வர்த்தக வங்கிகளிடமும் கண்மூடித்தனமாகக் கடன்களை வாங்கித் தனது அன்றாட விடயங்களை ஒருவாறு சமாளித்து முன்னெடுக்கும் அரசு, நாட்டின் வரவு - செலவுத் திட் டத்தில் துண்டு விழும் பெரும் தொகையைக் கடை சியில் எப்படிச் சமாளிக்கப் போகின்றது என்பது தெரிய வில்லை என்று விழியைப் பிதுக்குகின்றார்கள் பொரு ளியல் நிபுணர்கள்.

கடந்த ஜூன் மாதம் 28.2 வீதத்தை எட்டியிருக்கும் பணவீக்கம் விரைவில் 30 வீதத்தைத் தொட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த வகையில் பண வீக்க வீதத்தில் இலங்கை உலக சாதனையை எட்டும் போது நாடு அன்றாடப் பாட்டுக்கே 'லாட்டரி' அடிக்கும் நிலைமை தவிர்க்க முடியாததாகும்.

எப்படி இந்த நெருக்கடியை இலங்கைத் தீவு சமாளிக் கப் போகின்றது? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!

புலிகளின் ஒருதலைப்பட்ச போர் நிறுத்தமும் அரசின் அர்த்தமற்ற அலட்சியப் போக்கும்

'சார்க்' மாநாட்டின் செயற்பாடு களைக் குழப்பும் வகையில் எதுவித நடவடிக்கையிலும் இறங்கமாட்டார் கள் புலிகள் என்ற அவர்களின் கருத்து கடந்தவாரம் ஞாயிற்றுக்கிழமை வெளி யாயிற்று.

இரா.சம்பந்தன்

புலிகளின் இந்தக் கருத்தை அடுத்தநாள் திங்கட்கிழமைகொழும் பிலும்யாழ்ப் பாணத்திலும் வெளி வரும் தமிழ் பத்திரிகை கள் யாவும் மறு பிரசுரம் செய்திருந்தன. 'சார்க்' மாநாடு குழப்பம் எதுவும் இன்றி சீராக நடைபெற்று முடிய வேண்டும் என்பதே அவர்களின் அக்கறை. உண மையில் இந்த புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் நடேசனின் கருத்து உத்தியோகபூர்வமானதே. என்றாலும் 22ஆம் திகதி செவ்வாய்க் கிழமை 10 நாள் ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தை அறிவித்து அறிக்கை யொன்றை அவர்கள் வெளியிட்டிருந் தார்கள்.

''யுத்த மேகங்களுக்கிடையில் இலங்கை சிங்கள அரசானது தமிழ் மக்களைப் பெருமளவில் கொன்று குவித்து அவர்கள் மீது பெரும் சுமை களை அடுக்கி வருகின்றது. தமிழ் மக்கள் படிப்படியாகக் கொன்றொழிக்கப் படுகின்றார்கள் என்ற உண்மை மறைக்கப்பட்டு வருகின்றது. தமிழ் மக்களின் நியாயபூர்வமான போராட்டம் செய்தித் தணிக்கையென்ற இரும்புத் திரைக்குப் பின்னால் மறைக்கப்பட்டு விடுகின்றது. தமிழ் மக்கள் உரிமைப் போராட்டத்தையும் அதற்காக அது மேற் கொள்ளும் பாதையையும் மூடிமறைப் பதற்குப் பெரும் பிரசார நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் எமது விடுதலைப் போராட்டம் பற்றிய தவறான கருத்துக்களும் பிழை யான வழிகாட்டல்களும் முன்னெடுக் கப்பட்டுள்ளன. அதனால் நாம் பெரி தும் கவலையடைந்துள்ளோம்.

நட்புறவை வளர்க்க

''உலக நாடுகளுடனும் அண்டைய நாடுகளுடனும் நட்புறவை வளர்த் துக் கொள்ள நாம் எப்போதும் அக்கறை யுள்ளவர்களாகவே இருந்து வருகின் றோம். இந்த நட்புறவை வளர்த்துக் கொள்வதற்கான வெளிப்புற சூழ்நிலை களை உருவாக்கிக் கொள்ளும் எமது முயற்சிகளால் நாம் நேர்மையுடையவர் களாகவே இருந்து வருகின்றோம். இந்த நல்லெண்ணத்தின் அறிகுறி யாக எமது அமைப்பு 'சார்க்' மாநாடு நடைபெறும் காலப்பகுதியில் போர் நடவடிக்கைகளை நிறுத்தி வைப்ப தென அறிவிப்பதில் மகிழ்ச்சியடை கின்றது. மாநாடு வெற்றி பெறுவ தற்கு வாழ்த்துகிறது. அதேவேளை எமது இந்த நல்லெண்ண சமிக் ஞையை அவமதிப்புச் செய்து வலிந்து தாக்குதல்கள் நடத்தப்படுமானால் எமது அமைப்பு தற்காப்பு நடவடிக் கைகளை மேற்கொள்ளும்'' என்ற வாறு இந்த அறிக்கையில் தெரிவிக் கப்பட்டிருந்தது.

புலிகளின் இந்த ஒருதலைப்பட்ச மான போர்நிறுத்த அறிவிப்பானது மாநாட்டில் பங்குகொள்ளும் சில நாடு களின் பாதுகாப்புப் பற்றிய அச்சத் தைப் போக்கியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மாநாடு நடைபெறும் சமயத்தில் சம்பவம் ஏதும் இடம்பெறுமானால் பங்குபற்றும் நாடுகளின் ஆத்தி ரத்தை அதிகரிக்கும் என்பது ஒருபுற மிருக்க, மாநாட்டுக்கு வருகைதரும் சர்வதேச பத்திரிகையாளர்களின் செய் திப் பரப்புரைகள் மூலம் தென்னாசி யப் பிரதேசத்தில் புலிகளுக்கு அப கீர்த்தியை ஏற்படுத்தும். மேலும் ''சார்க்'' நாடுகளின் கோபத்துக்குள் ளாக நேர்வதுடன் புலிகளுக்கு எதிராக அந்நாடுகள் மேலும் தீவிரமாக ஒருங் கிணைந்து செயற்படுவதற்கான சந் தர்ப்பத்தையும் ஏற்படுத்தியிருக் கும். இந்தவிதமாகப் புலிகள் ஒரு தலைப் பட்ச போர்நிறுத்தத்தை அறி வித்தமை அரசாங்கத்தை ஒரு கட்டுப் பாட்டுக் குள் அடங்கச் செய்வதாக இருந்திருக் கலாம். ஆனால் போர்நிறுத் தத்தை அலட்சியப்படுத்தும் மனப் போக்கே தென்பட்டது. புலிகளுக்குப் பொருத்த மான பதில் ஒன்றை வழங் குவது பற்றி உயர்மட்டக் கூட்டமொன் றில் ஆலோசிக்கப்பட்டது என்றாலும், வெவ்வேறு விதமான அபிப்பிரா யங் கள் வெளியாகின. இன்றைய அரசாங் கத்தைப் பொறுத்தவரை இதில் ஆச்சரி யமில்லை. அவர்களில் பலரும் பல குரல்களில் பேசுபவர்கள்.

இராணுவ சக்தியின் பலவீனத்தைக் கூட்டுவதாக உள்ளபோதிலும் இது ஒரு சாதகமான வளர்ச்சிப்போக்கைக் காட்டுவதாக ஓர் அமைச்சர் கருத்து வெளியிட்டிருக்கிறார். செவ்வாய்க் கிழமையன்று நோர்வே அரசு புலிக ளின் போர்நிறுத்தம் குறித்து அறிவித் தது.இருதரப்புக்குமான அனுசரணை யாளர் நிலையில் அது தொடர்ந்து இருந்து வருகின்றது.

புலிகள் 'சார்க்' மாநாட்டுக்கு முன் னதாக வன்செயல்கள் பலவற்றை கட்டவிழ்த்து விடுவதற்குத் திட்ட மிட்டிருந்துள்ளார்கள். இது பாதுகாப் புத் தரப்பினருக்குப் பெருங்கவலை யைக் கொடுத்திருந்தது. முக்கியமான அமைப்புக்கள் குறிவைக்கப் பட்டிருக் கலாம். இருந்தாலும் சார்க் மாநாட்டின் போதும் அதற்கு முன்னரும் பொதுமக் கள் மீது தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டாம் என வன்னித் தலைமை யினர் தமது போராளிகளுக்கு அறி வித்திருந்துள்ளனர். இவை பற்றிய விவரங்கள் அதிகாரிகளுக்குக் கிடைத் திருந்தாலும் அவை பற்றிய ஆய்வு இன்னமும் முடிவு பெறவில்லை.

ஆனால், மாநாட்டுக்கு முன்னதாக சில முக்கிய இலக்குகளின் மீது தாக் கு தல் நடத்தவென பல தற்கொலைப் போராளிகள் கொழும்பு நகருக்குள் ஊடுருவியிருந்தார்கள் என்று கூறப் பட்டது. இதேவிதக் கவலை இலங் கைக்கு அடிக்கடி வந்து சென்ற இந்திய அதிகாரிகளுக்கும் இருந்துள்ளது.

சம்பந்தன் நடத்திய பேச்சுவார்த்தை

இந்த நிலையில் இலங்கையில் பாதுகாப்பு நிலைமைகளை ஆராய்வதற் காக வந்திருந்த உயர்மட்டக் குழுவினருடன் தமிழ்த்தேசிய கூட்டமைப் பின் தலைவர் ஆர். சம்பந்தன் தனித்த நிலை யில் இலங்கைத் தமிழர்களின் அங்கலாய்ப் புக்களை எடுத்துக் கூறியிருந்தார். இந்தப் பேச்சுக் களின்போது இந்திய அரசின் பாது காப்பு ஆலோசகர் எம்.கே. நாராயண னுடன் சம்பந்தன் காரசார மாக விவா தத்தில் ஈடுபட்டதாகவும் கூறப்பட்டது.

எம்.கே.நாராயணன்

இந்தியா இலங்கைத் தமிழ் மக்க ளைக் கைவிட்டுவிட்டதாகவும் இத னால் இலங்கைத் தமிழர்கள் ஏமாற்ற மடைந்திருப்பதாகவும் சம்பந்தன் எடுத்துக் கூறியிருந்தார்.

ஒரு கட்டத்தில் நாராயணன் சம் பந்தனைப் பார்த்து பின்வருமாறு கூறி யதாதாகத் தெரிகிறது.

''எமது நாட்டின் மதிப்பு மிக்க தலை வரைக் (ராஜிவ்) கொலை செய்து விட்டு இலங்கைத் தமிழர்களுக்கு நாங்கள் நீதி வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா? இதில் அர்த்த மில்லை. இந்தக் கொலைக்காக யாரா வது தண்டிக்கப்பட வேண்டும். அப் போதுதான் உங்கள் சார்பில் இந்தியா தலையிடும்'' என்று கூறிவிட்டு அவர் மேலும் கூறியுள்ளார்.

புலிகளின் தலைவர் பிரபாகரனை விடுவோம். இந்தக் கொலையைத் திட்டமிட்டு உத்தரவு பிறப்பித்தவ ரான பொட்டு அம்மானையாகிலும் நீங்கள் ஒப்படைக்க வேண்டாமா? இதற்கு உங்கள் தரப்பில் தயாராக இருக்கிறீர்களா? என்றும் கேட்டுள்ளார்.

அதிர்ச்சிக்குள்ளான சம்பந்தன் இதற்கு நேரடியாகப் பதிலளிக்காமல் தவிர்த்துவிட்டார். சம்பந்தனால் இந்த விடயத்தில் ஒன்றும் செய்ய முடியாது என்பது இந்தியத் தரப்பினருக்குத் தெரியும். என்றாலும் தங்கள் தரப்பின் நிலைப்பாட்டினைப் புலிகள் தரப்பி னருக்குத் தெரிவிக்க வேண்டும் என் பதே அவர்களின் நோக்கம். இது புலி களுக்குச் சம்பந்தனால் தெரிவிக்கப் பட்டதா என்பது தெரியவில்லை.

சம்பந்தனுடன் கடுந்தொனியில் பேச நேர்ந்தது பற்றி பின்னர் நாராய ணன் கவலைப்பட்டதாகவும், சம்பந் தனைச் சாந்தப்படுத்துமாறு இந்திய தூதுவரைக் கேட்டுக் கொண்டதா கவும் செய்திகள் கூறின. (ப)

சண்டே ரைம்ஸ்' களநிலை ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் நேற்று ஞாயிற்றுக் கிழமை (27.07.2008) எழுதியிருந்த ஆய்வுக் கட்டுரையின் ஒரு பகுதி

இந்திய பாதுகாப்பு செயலர் நாராயணனுடன் சம்பந்தனுக்கு ஏற்பட்ட வாக்குவாதம்

நாளை

ஆடி 14	29.07.2008 செவ்வாய்க்கிழமை
திதி:	துவாதசி மு.இ. 11.11 வரை
நட்சத்திரம் :	மிருகசீரிடம் மு.இ. 11.15 வரை
சுபநேரம் :	10.33 - 12.03
ராகுகாலம் :	03.03 - 04.33

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



குருதிக் கொடையாளரே உங்கள் உன்னத தியாகத்தை மதிக்கின்றோம்

* இரத்ததானத்தின்முன், இரத்தம் வழங்குவதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு இருக்கின்றதா என்பது கேட்டு அறியப்படும்.
* பின்னர் நாடித்துடிப்பு, குருதி அமுக்கம் போன்ற முக்கியமான சோதனைகள் செய்யப்படும்.
* குருதிக் கொடையாளர்களின் உடல் நிறையும் குருதிச் செறிவும் அளக்கப்படும்.
* உணவு, நீராகாரம் உட்கொண்ட விவரம் கேட்டு உறுதி செய்யப்படும்.
* உடலில் உள்ள குருதியில் 10% குருதியே பெற்றுக் கொள்ளப்படும்.
* குருதி வழங்கலின் பின்னர் நீர் ஆகாரமும் வழங்கப்படும், சற்று நேரம் ஓய்வாக இருக்க வேண்டும்.
* குருதி வழங்கலின் பின்னர் கடைப்பிக்க வேண்டியவை சம்பந்தமான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.

இரத்தவங்கி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.
021 222 3063

குருதிக் கொடையாளர் கௌரவிப்பு விழா-02.08.2008

நெடுந்தீவில் விரைவில் 'கோப்சிற்றி' திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை28

நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் விரைவில் ''கோப்சிற்றி'' விற்பனை நிலையத்தை திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கான விற்பனை நிலைய கட்டடம் நெடுந்தீவு மத்தியில் அமைக்கப்பட்டு வருவதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கட்டடப் பணிகள் பூர்த்தியடைந்ததும்- அடுத்தமாத முற்பகுதியில் ''கோப்சிற்றி'' கட்டடத்தை திறந்து வைக்க முடியும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(202-224)

அறிவித்தல்

வேலணை பெருங்குளம் முத்துமாரிஅம்மன் ஆலயம்

வேலணை, பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவ காலங்களில் ஆலய பரிபாலன சபையினரால் அம்மன் அடியார்களின் பங்களிப்பைக் கொண்டு அன்னதானம் வழங்கப்பட்டு வருவது அடியார்கள் யாவரும் அறிந்ததே. இருப்பினும் அம்பிகை அன்னதான சபை எனக் கூறிக்கொண்டு சிலர் தாமே அன்னதான நிகழ்வை நடத்துவதாக அடியார்கள் மத்தியில் கூறி வருவதாக அறியமுடிகிறது. எனவே அம்மன் அடியார்கள் வழமை போல் ஆலய பரிபாலன சபையினருடன் இணைந்து குறித்த அன்னதான நிகழ்வை நடத்த உதவுமாறு பணிவுடன் வேண்டுவதோடு வேறு எவருக்கும் அன்னதானப் பணியிலீடுபட பரிபாலன சபையினர் அனுமதி வழங்கவில்லை என அறியத் தருகின்றோம்.

சு. சுந்தரலிங்கம்,
செயலாளர்.

(76671)

கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவனும் மானிட சமூகவியல் துறை உதவி விரிவுரையாளருமாகிய சண்முகராஜா சிரிகாந்தன் அவர்களின் அன்புத் தாய்

திருமதி

சண்முகராஜா தையல்நாயகி

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

விரிவுரையாளர்கள், மாணவர்கள்,
முதுகலைமாணி குடித்தொகை அபிவிருத்திக் கல்வி, பட்டப்பின் படிப்புகள் நிலையம்,
யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம். (76678)

ஆடிச்செவ்வாய் திருவிழா

வலி.வடக்கு, ஜூலை 28

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய இரண்டாவது ஆடிச் செவ்வாய் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை விசேட பூசைகளுடன் நடைபெறவுள்ளது.

நண்பகல் வழமை போன்று மகேஸ்வர பூசையும் அதனைத் தொடர்ந்து மாலை யில் பூசைகள் இடம்பெற்று அம்பாள் வீதி உலா வரும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

(202-86)

கோப்பாய் இராச வீதியைப் புனரமைக்கக் கோரிக்கை

நீர்வேலி, ஜூலை28

எதிர்வரும் மாரி காலத்திற்கு முன்னர் கோப்பாய் இராச வீதியைப் புனரமைக்கு மாறு விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பெரும் குன்றும், குழியுமாகக் காணப்படும் இந்த வீதி புனரமைக்கப்படாத நிலையினால் வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.

அத்துடன் வலி.கிழக்கு பிரதேசத்தில் இருந்து திருநெல்வேலிச் சந்தைக்குத் தமது விவசாயப் பொருள்களை சந்தைப்படுத்தச் செல்லும் விவசாயிகள் வீதியின் அவல நிலையால் சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவித்து வருவதாகச் சுட்டிக் காட்டுகின்றனர்.

இவ்வீதியை எதிர்வரும் பருவ மழைக்கு முன்னர் புனரமைக்காவிட்டால் இவ்வீதி மோசமாகப் பாதிப்படையும் என்றும்- சுட்டிக் காட்டப்பட்டது.

மிகவும் பாதிக்கப்பட்ட இவ்வீதியை புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்டோர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (202-224)

ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜூலை 28

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் யேசுபணி அகதிகள் சபை நிறுவனத்தின் அனுசரணையுடன் கடமையாற்றும் ஆங்கிலபாட ஆசிரியர்களுக்கான ஜூலை மாதக் கொடுப்பனவு நாளை மறுதினம் நண்பகல் 12 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் வழங்கப்படும் என நிறுவன தென்மராட்சி பிரதேச இணைப்பாளர் ம.அ. மரிய்அன்ரனி தெரிவித்தார்.

மாவட்ட இணைப்பாளராக நியமனம் பெற்றவருக்கான வரவேற்பு நிகழ்வும் இடம் பெறும் என்றும் தெரிவித்தார்.

(202-207)

11ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 19 ★ 11 ★ 1961

உதிர்வு 30 ★ 07 ★ 1997

செல்வி மைதிலி கந்தசாமி

திதி: ஏகாதசி

ஆண்டுகள் பதினொன்று சென்றும்
ஆறவில்லையம்மா உன் துயரம்
மீண்டும் நீ வாராயோ எமை
நிதம் ஏங்கித் தவிக்கின்றோம்.

(76648)

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு.

உன் பிரிவால் வாடும்:
அம்மா, சகோதரர்கள்.

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06.01.1928

மறைவு 09.08.2007

அமரர் செல்லப்பா ஆறுமுகம் (காரைநகர்)

(முன்னாள் வைத்திய ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர்)

திதி: ஆடி பூர்வபட்ச ஏகாதசி (28.07.2008)

காக்கும் எம் காவலனே கண்பாரிய பேரொளியே!
சிவ நாமம் துலங்குகின்ற சிவபுரி காரைதனில்
சீர்பூத்த வித்தகர் செல்லப்பா- வள்ளியம்மை
செய்தவத்தால் வந்துதித்த ஆறுமுகச் செம்மல்
பார்பெற்ற பண்பாளன் பக்திநிறு சிவதொண்டன்
அமைத்துவிட்ட பாதையில் அனிவகுத்து நாமிருக்க(ச்)
சிந்தை நிறை சிவன்பாதம் சேர்ந்த விதம் அறியோமே!
சிவன் கழல் நீழ் அமர்ந்து எம் வாழ்வைத் துலக்கிடுவீர்
உம் இறையினையைத் தொடர்ந்திருவோம்.

124, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(76680)

குடும்பத்தினர்.

90 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி

விஸ்வலிங்கம் சசிகலா

(மீனா)

தோற்றம் : 11.02.1966

மறைவு : 28.04.2008

அன்புக்கோர் அணிகலனாய்
ஆசைக்கோர் ஒளி விளக்காய்
இன்ப வாழ்வில் பிரகாசித்த சசியே!
இன்று நீ எம்முடன் இல்லை!
துன்பச் சுவடே தெரியாமல்
தாயவளாய் வாழ்ந்திட்டாய்!
ஏனோ எம்மைப் பிரிந்திட்டாய்
எங்கு தான் நீ சென்றாயோ?
மீனா என்றழைத்தே மகிழ்ந்திருந்தோம்
இன்று கண்ணீர் சிந்துகின்றோம்
உன்னை நினைக்காத நாளில்லை
உன் ஆத்மா சாந்தியடையட்டும்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இலிங்கம் களஞ்சியத்தினர்.

இலிங்கம் களஞ்சியம்,
வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலடி,
கோட்டடி, யாழ்ப்பாணம்.

நுணாவில் மேற்கு,
மடத்தடி, சாவகச்சேரி.

(76682)

நினைவஞ்சலி

நான்காம் ஆண்டு

மலர்வு 29.11.1952

உதிர்வு 11.08.2004

பதினெட்டாம் ஆண்டு

மலர்வு 17.07.1986

உதிர்வு 17.03.1990

அமரர் இளையதம்பி அமிர்தலிங்கம் (அமுது)

(அமுதர் கல்முனைக்குடி ஆலை ஊதாகர்)

திதி: ஏகாதசி (28.07.2008)

செல்வி அமிதா அமிர்தலிங்கம்

பாசத்தின் அப்பாவே! அயலவரின் அமுதே!
என்றும் உங்கள் நினைவுகளோடு வாழும்
'உமையவள் உறை', கோப்பாய் தெற்கு. (76674)

பாசத்தின் சகோதரியே! பிரிந்துன்னை- இன்று
வருடம் பதினெட்டென்றானது.
பாசமுள்ள குடும்பத்தினர்.

நீங்காத நினைவலைகள்

முதலாம் ஆண்டு

தோற்றம்
17.07.1946

மறைவு
09.08.2007

திதி: 28.07.2008

நினைவு கூருகின்றோம்

10ஆம் ஆண்டு 6ஆம் ஆண்டு

அமரர் சபாபதி பொன்னுச்சாமி
(அண்ணாத்துரை)

ஆண்டு ஒன்றாகியும் உனது அன்புச் சிரிப்பு
எம்மை விட்டு அகலாது ஐயா!
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும்
உன் நாமம் எம்மைவிட்டு அகலாது ஐயா!
பாசமென்னும் பாலத்தில் பயணித்த போதும்
உன் பாதங்களை என்றும் மறவோம் ஐயா!

அமரர் மாணிக்கம் சபாபதி
திருமதி சபாபதி சின்னக்கிளி

15.10.1924 தோற்றம் 10.11.1931
18.03.1998 மறைவு 03.04.2002
10.04.2008 திதி 12.04.2008

தாயின் மடியிலே, கருணாநிதி ச.ச.நிலையம், வல்வெட்டி. (76656)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நளினியை விடுதலை செய்ய மத்திய அரசு சம்மதித்தால் தமிழக அரசிற்கு மறுப்பில்லை

முதல்வர் கருணாநிதி தெரிவிப்பு

சென்னை, ஜூலை 28

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று 17 ஆண்டுகளுக்கு மேலாக சிறையிலிருந்து வரும் நளினியை விடுதலை செய்ய மத்திய அரசு சம்மதம் தெரிவித்தால் தமிழக அரசுக்கு மறுப்பில்லை.

-இவ்வாறு தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

நளினியை விடுதலை செய்யக் கோரும் கையெழுத்து இயக்க அமைப்பாளரும் திரைப்படப் பாடல் ஆசிரியருமான தாமரை, நேற்று முன்தினம் சென்னையில் செய்தியாளர்களுக்கு வழங்கிய பேட்டியில் கருணாநிதி தம்பிடம் மேற்கண்டவாறு கூறியதாக தகவல் வெளியிட்டார்.

அவர் வழங்கிய பேட்டியின் விவரம் மேலும் வருமாறு-

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் சிறைத்தண்டனை பெற்று கடந்த 17 ஆண்டுகளுக்கு மேலாக நளினி சிறையில் இருந்து வருகிறார். அவரை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கையெழுத்து இயக்கத்தை நடத்தினோம்.

இந்தக் கையெழுத்து இயக்கத்தில் எழுத் தாளர்கள் சுஜாதா, தி.க.சி, பிரபஞ் சன், கவிஞர்கள் கனிமொழி கருணாநிதி எம்.பி., வாலி, வைரமுத்து, அப்துல்ரகுமான் மற்றும் பழ.நெடுமாறன், தொல்.திருமாவளவன், சாலமன் பாப்பையா உட்பட 500-க்கு மேற்பட்டவர்கள் கையெழுத்திட்டுள்ளனர். கையெழுத்து இயக்கப் பட்டியலை கடந்த 19ஆம் திகதி முதலமைச்சர் கருணாநிதியை நேரில் சந்தித்துத் கொடுத்தோம். அப்போது அவர், ''நளினியின் வழக்கு மாநில அரசு தொடர்பானது மட்டுமல்ல, மத்திய அரசு தொடர்புள்ளதாகவும் இருப்பதால் மத்திய அரசை அணுகுமாறும், மத்திய அரசு நளினியை விடுதலை செய்யச் சம்மதம் தெரிவித்தால் தனக்கும் மறுப்பு இல்லை எனக் கூறினார்.

எனவே, விரைவில் பிரதமர் மன்மோகன் சிங், சோனியா காந்தியைச் சந்தித்து கையெழுத்து இயக்கப் பட்டியலைக் கொடுக்க இருக்கிறோம். 161ஆம் சட்டப்பிரிவைப் பயன்படுத்தி மனிதாபிமான அடிப்படையில் நளினியை அண்ணா பிறந்த நாளில் விடுதலை செய்ய வேண்டும்.

- இவ்வாறு தாமரை கூறினார்.

பேட்டியின் போது தாமரையின் கணவர் தியாகு, எழுத்தாளர் ஜெயப்பிரகாசம் ஆகியோர் உடனிருந்தனர்.

புலிகளின் முகவரி ரசீதுடன் திருச்செந்தூரில் 'கமரா பாக்!'

தூத்துக்குடி, ஜூலை 28

திருச்செந்தூர் கோயிலில் அநாதரவாகக் கிடந்த 'கமரா பாக்கில்' புலிகளின் தலைமையகமான கிளிநொச்சி முகவரியில் நன்கொடை ரசீது இருந்தது. பையை புலி ஆதரவாளர்கள் விட்டுச் சென்றார்களா எனப் பொலிஸார் விசாரித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப் படுகிறது.

திருச்செந்தூர் முருகன் கோயிலுக்குச் செல்லும் வழியில் தூண்டிகை விநாயகர் கோயிலுள்ளது. கடந்த வெள்ளியன்று அங்கு அநாதரவாக்க கிடந்த பையை வி.ஏ.ஓ. பாலசுப்பிரமணியன் எடுத்துப் பொலிஸில் ஒப்படைத்தார். அந்தப் பையில் இந்த நன்கொடை ரசீது இருப்பதுகண்டுபிடிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் கிளிநொச்சியில்தான் உள்ளது. எனவே தமிழகப் பகுதிகளை உளவு பையை வந்த புலி ஆதரவாளர்கள் யாராவது பாக்கை தவறவிட்டுச் சென்றிருப்பார்களா என்ற கோணத்தில் விசாரணை நடந்து வருகிறது. அந்தப் பையில் இருந்தபலிம் ரோல்களை பிரிண்ட் போட்டு அதிலுள்ள படங்களை பார்க்கவுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

குஜராத்தில் 17 இடங்களில் தொடர் குண்டுவெடிப்பு

45 பேர் பலி; 100இற்கும் மேற்பட்டோர் படுகாயம்!

பெங்களூர், ஜூலை 28

பெங்களூரில் நடந்த தொடர் குண்டு வெடிப்பை அடுத்து நேற்றுமுன்தினம் குஜராத் தலைநகர் அகமதாபாத்தில் 17 இடங்களில் அடுத்தடுத்து தொடர்ச்சியாகக் குண்டுகள் வெடித்ததில் 45 பேர் உடல் சிதறிப் பலியாகினர்; 100 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

மேலும் இக்கொடூரச் சம்பவம் தொடர்பாக வெளியான செய்திகள் வருமாறு:-

பெங்களூர் குண்டுவெடிப்புச் சம்பவத்தினால் ஏற்பட்ட பீதி ஓய்வதற்கும் குஜராத் மாநில தலைநகர் அகமதாபாத்தில் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். சங்கிலித் தொடர்போல் அடுத்தடுத்து 17 இடங்களில் குண்டுகள் வெடித்தன.

'இந்திய முஜாஹிதீன்' பொறுப்பேற்பு

அகமதாபாத் குண்டுவெடிப்புக்கு 'இந்திய முஜாஹிதீன்' என்றபயங்கரவாதஇயக்கம்பொறுப் பேற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

குண்டுவெடிப்பு நடந்த சில நிமிடங்களில் பல்வேறு தொலைக்காட்சிகளுக்கும் அந்த இயக்கம் 14 பக்க மின்னஞ்சலை அனுப்பியது. அதில் குண்டுவெடிப்புச் சம்பவங்களைத் தாங்களே நடத்தினர் எனக் கூறியுள்ளது.

கோத்ரா ரயில் எரிப்புச் சம்பவத்திற்குப் பிறகு நடந்த வன்முறைகளுக்குப் பழிதீர்ப் பதற்காகவே இதைச் செய்ததாகவும், அடுத்ததாக மத்தியப் பிரதேசம், மகராஷ்டிரம், ஆந்திரப் பிரதேசங்களில் குண்டு வெடிக்கும் எனவும் அந்த மின்னஞ்சலில் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை மதியம் 'தான் யாகூ' இணையத்தளத்தில் இந்த மின்னஞ்சலை அனுப்புவதற்கான முகவரி உருவாக்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட 'சிமி' மற்றும் காகில் தான் லஷ்கர் அமைப்புகள்தான் புதிய பெயரில் இந்தத் தாக்குதல்களை நடத்தியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

இதனால் நகரமே குலுங்கியது. மணிநகர், இசான்பூர், நரோல் சர்க்கிள், பாபுநகர், சாரங்பூர் பாலம், தக்கர்பாபு நகர், சர்கேஜ், கோவிந்த வாடி, ஓதவ் சவுக், ஹத்கேஷ்வர் உள்ளிட்ட 17 இடங்களில் குண்டுகள் வெடித்தன.

சந்தை கள், முக்கிய வீதிச் சந்திப்புகள் போன்ற மக் கள் அதிகம் கூடும் இடங்களில் இந்தக் குண் டுகள் வைக்கப்பட்டிருந்தன.

சில இடங்களில் 'டிபன் பாக்ஸ்' வெடி குண்டுகளை தீவிரவாதிகள் சைக்கிள்களில் வைத்திருந்தனர். மாலை 6.45 மணிமுதல் இரவு 7.30 மணிவரை இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்தன.

இந்தத் தொடர் குண்டு வெடிப்புகளில் 45 பேர் உடல் சிதறிப் பலியானார்கள். மேலும் நூற்றுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலியானோர் எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

முதல் குண்டு, மாலை 6.45 மணிக்கு மணிநகர் சவுக் பகுதியில் வெடித்தது. மணிநகர் குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடியின் தொகுதி. மணிநகரில் உள்ள எல்.ஜி. வைத்தியசாலை அருகேமற்றொருகுண்டுவெடித்தது.

அதைத் தொடர்ந்து மற்ற இடங்களில் அடுத்தடுத்துக் குண்டுகள் வெடித்தன. சாரங்பூர் பாலத்தில், எரிவாயுவில் இயங்கும் மாநில அரசின் பஸ்ஸில் குண்டு வெடித்தது. இதில் அந்தப் பஸ் நொறுங்கிச் சின்னாபின்னமானது. பஸ்ஸின் உட்பகுதி முழுவதும் ரத்தக்காடானது. பஸ்ஸுக்குள் இருந்த பயணிகள் ரத்தக் காயங்களுடன் இறங்கி ஓடினார்கள்.

மாலைநேரம் என்பதால் குண்டுவெடித்த இடங்களில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. குண்டுகள் வெடித்ததும் அவர்கள் அலறியடித்துக்கொண்டு அங்கும் இங்குமாக சிதறி ஓடியதால் நெரிசலும், பெரும் குழப்பமும் ஏற்பட்டன. மற்றொரு இடத்திலும் பஸ்ஸில் குண்டுவெடித்தது. சர்கேஜ் பகுதியில் சினிமா தியேட்டர் வளாகத்தில் குண்டு வெடித்தது. மேலும் 2 வைத்தியசாலை வளாகங்களிலும் குண்டுகள் வெடித்தன.

குண்டுகள் வெடித்த இடங்களில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள், மோட்டார் சைக்கிள், ஓட்டோ போன்ற வாகனங்கள் பலத்த சேதம் அடைந்தன. பலத்த உயிர்ச் சேதத்தை ஏற்

காந்தி பிறந்த மண்ணில் ரத்த ஆறு!

குண்டுவெடிப்புக் குறித்து குஜராத் முதல்வர் நரேந்திரமோடி விடுத்துள்ள அறிக்கையில்-

குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கு காரணமானவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள். பெங்களூரிலும், அகமதாபாத்திலும் நடைபெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்கள் ஒரேமாதிரியாக இருப்பதால் இந்தக் குண்டு வெடிப்புகளை ஒரே அமைப்பு அல்லது ஒரே நாடு நடத்தியிருக்க வேண்டும். காந்தி பிறந்த மண்ணில் ரத்த ஆறை ஓட விட்டிருக்கிறார்கள். மக்கள் பீதியடைய வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களுக்கு அனைத்துச் செலவுகளையும் அரசு ஏற்றுக கொள்ளும். இறந்தவர்கள் குடும்பத்துக்கு ஒரு லட்சம் ரூபாவும் காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

இக்குண்டுவெடிப்புச் சம்பவம் மனிதநேயத்துக்கு எதிரானது. பயங்கரவாதத்தை ஒழிக்க அனைவரும் ஒன்றுபடவேண்டும்-எனறு தெரிவிக்கப்பட்டுள்ளது

படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் தீவிரவாதிகள் குண்டுகளை வைத்துள்ளனர்.

குண்டுவெடிப்புப் பற்றிய தகவல் கிடைத்ததும் பொலிஸாரும் வெடிகுண்டு நிபுணர்களும் சம்பவ இடங்களுக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினார்கள். மோப்ப நாய்களும் வரவழைக்கப்பட்டன. பலியான வர்களின் உடல்களை அப்புறப்படுத்திய பொலிஸார், காயமடைந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவர்களை வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர். அந்தந்தப் பகுதியில் உள்ள பொதுமக்களும் விரைந்து வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

தொடர் குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளின் கூட்டத்தைக் கூட்டி அவசர ஆலோசனை நடத்தினார். இதைத்தொடர்ந்து, அகமதாபாத் உள்ளிட்ட மாநிலத்தில் உள்ள அனைத்து நகரங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டன.

தமிழகத்துக்கும் தீவிரவாத அச்சுறுத்தல்

சென்னை, ஜூலை 28

வழிபாட்டுத் தலங்கள் உள்ளிட்ட முக்கிய இடங்களுக்கு தீவிரவாத அச்சுறுத்தல் இருப்பதாக மத்திய அரசு தமிழக அரசைச் சனிக்கிழமையன்று எச்சரித்தது.

இதையடுத்து, தமிழகம் முழுவதும் வழிபாட்டுத் தலங்கள், விமான நிலையம், ரயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள், சினிமாத் தியேட்டர்கள், வணிக வளாகங்கள், கடற்கரை, பூங்காக்கள் ஆகிய இடங்களில் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து தமிழக டி.ஜி.பி., கே.பி. ஜெயினிடம் கேட்டபோது,

''குண்டுவெடிப்புகள் நடக்கும்போது மத்திய அரசு இதுபோன்று எச்சரிக்கை அனுப்புவது வழக்கம். வழிபாட்டுத் தலங்கள், ரயில் நிலையங்கள் உள்ளிட்ட இடங்களுக்கு ஆபத்து இருப்பதாக மத்திய உளவுத்துறை தெரிவித்துள்ளது'' - என்றார்.

பெங்களூர் குண்டுவெடிப்பைத் தொடர்ந்து பாதுகாப்பு நடவடிக்கை குறித்த ஆய்வுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. தமிழக தலைமைச் செயலர் எல்.கே. திரிபாதி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், தமிழகடிஜி.பி. கே.பி. ஜெயின்உள்ளிட்ட காவல்துறை உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

நீர்த் தேக்கங்கள், மின் நிலையங்கள், அணு உலைகள் போன்ற மிக இன்றியமையாத இடங்களுக்கு 24 மணிநேரப் பாதுகாப்பு வழங்க இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப் பட்டது.

தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள், பி.பி.ஓ. மையங்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கவும், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கவும் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

வழக்கமாகக் குற்றம் புரிவோர், குற்றப்பட்டியலில் உள்ளோர், தீவிரவாத, மத அடிப்படைவாதிகள், சமூக விரோதிகள் ஆகியோர் மீதான கண்காணிப்பைத் தீவிரப்படுத்தவும், தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவும் காவல்துறை அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர் எனத் தமிழக அரசு சனிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதியின்றித் தங்கியிருக்கும் அல்லது நாட்டவர்களைக் கண்காணிக்கவும் வெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரடோவன் கைதானமையை எதிர்த்து பொஸ்னியாவில் ஆர்ப்பாட்டப் பேரணி

பெல்கிரேட், ஜூலை 28

முன்னாள் பொஸ்னிய சேர்பியத் தலைவர் ரடோவன் கரோட்ஜிக் கைது செய்யப்பட்டமைக்குக் கடும் ஆட்சேபனை தெரிவித்து, பொஸ்னியாவிலுள்ள சேர்பியப்பகுதிகளில், ஆயிரக்கணக்கான ஆதரவாளர்க ளால் ஆர்ப்பாட்டம் பேரணிகள் நடத்தப்பட்டன.

பொஸ்னியாவில், 1992 ஆம் ஆண்டு முதல், 1995 ஆம் ஆண்டு வரை, யுத்தம் நீடித்தது. அக்கால கட்டத்தில் ரடோவனின் தலைமைப் பணியகம் சேர்பியாவிலேயே இயங்கி வந்தது. இனப் படுகொலைகள், மனிதகுலத்துக்கு எதிரான குரூர குற்றங்கள் ஆகியவை ரடோவன்மீதுசுமத்தப்பட்டுள்ளன.

ரடோவனின் ஆதரவாளர்களின் பாரிய ஆட்சேப ஆர்ப்பாட்டப் பேரணிகள், சரஜீவோவுக்கு அருகிலுள்ள பேலிலிலும், தலைநகரான பெல்கிரேட்டிலும் நடைபெற்றன. தேவாலய மணிகளும் அடிக்கப்பட்டன. இவற்றில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களில் அநேகர் ரடோவனுக்கு ஆதரவான வாசகங்கள் பொறிக்கப் பட்ட அட்டைகள், பதாகைகள் ஆகியவற்றை ஏந்தியிருந்தனர். கொடிகள் பிடித்திருந்தனர். ரடோவனின் உருவப் படம் தாங்கிய அட்டைகளையும் ஏந்தியிருந்தனர். மெழுகுதிரிகளும் ஏற்றப்பட்டன.

சந்திரிகாவின் உரிமைகளை அரசு பறித்தால் ஐ.தே.கட்சி எதிர்க்கும்!

கொழும்பு, ஜூலை 28

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சிவில் உரிமைகளைப் பறிப்பதற்கான முயற்சிகள் இடம்பெறும் பட்சத்தில் அதனைக் கொள்கையளவில் எதிர்ப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திலேயே இது குறித்துத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1998இல் உருவாக்கப்பட்ட கொள்கையின் அடிப்படையில் தமது கட்சி இதனை எதிர்க்கும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் சிவில் உரிமைகள் பறிக்கப்பட்டதை ரத்துச் செய்யும் தீர்மானமொன்றை பொதுஜன ஐக்கிய முன்னணி 1998இல் கொண்டு வந்தவேளை, எதிர்காலத்தில் ஜனாதிபதியின் விசேட அதிகாரங்களைப் பயன்படுத்தி சிவில் உரிமைகள் பறிக்கப்பட மாட்டாது என அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உறுதியளித்ததைச் சுட்டிக்காட்டியுள்ள எதிர்க்கட்சித் தலைவர், இதன் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சி மேற்படி தீர்மானத்திற்கு ஆதரவளித்தது எனக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய ஜனாதிபதியும் அவ்வேளை இதற்கு ஆதரவளித்ததையும் ரணில் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-சி)

புதிய பாதுகாப்பு நடைமுறை கொழும்பில் நேற்று அமுல்!

கொழும்பு, ஜூலை 28

'சார்க்' மாநாட்டையொட்டி கொழும்பு நகரில் புதிய பாதுகாப்பு நடைமுறை நேற்றுத் தொடக்கம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

வெளியிடங்களில் இருந்து கொழும்பு நகருக்குள் நுழையும் அனைத்து வாகனங்களும் தீவிர சோத்னைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன.

பாதுகாப்புப் பணியில் படையினர், பொலிஸார், விமானப் படையினர், விசேட அதிரடிப்படையினர், சிவில் பாதுகாப்புப் படையினர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புப் பிரிவினர் ஆகியதரப்புக்கள்ஈடுபட்டுள்ளன.

கொழும்பு நகரப்பகுதியில் பொலிஸாருடன் இணைந்து பொதுமக்கள் பாதுகாப்புப் பிரிவினர் நேற்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். பிரதான வீதிகளின் ஓரங்களிலுள்ள வர்த்தக நிலையங்கள், வீடுகளில் தேடுதல்கள் இடம்பெற்றன.

இதேவேளை, 'சார்க்' மாநாட்டை முன்னிட்டு கட்டுநாயக்கா விமான நிலையம் தொடக்கம் கொழும்பு நகரம் முழுவதும் சார்க் நாடுகளின் கொடிகள் பறக்கவிடப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன.

முக்கிய இடங்களில் சார்க் மாநாடு தொடர்பான பெரிய அளவிலான 'கட் அவுட்'கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

கொழும்பு நகரின் பிரதான வீதிகளின் கரையோரங்களில் அமைக்கப்பட்டிருந்த தட்டிக்கடைகள் அகற்றப்பட்டிருக்கின்றன. (அ-சி)

கண்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்தில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை,கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரை கண்டி நகரில் பொலிஸாரின் திடீர் சோதனைகளில் 380 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர் என்றும், இவர்களில் 5 பேர் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்கள் என்றும் கண்டிப் பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (சி)

பொலநறுவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாள்களுக்கு முன்னர் கொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சட்ட வைத்திய பரிசோதனையின் பின்னரே மனித எலும்பு எச்சங்கள் எப்போது புதைக்கப்பட்டன என்று கூறமுடியும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். சரணாலயப் பகுதியில் இலங்கை விமானப்படையின் மூன்றாவது படைத்தளம் அமைந்திருக்கின்றது என்றும் -

கருணா குழுவின் முகாம்களும் அமைந்துள்ளன என்றும் இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது. (அ-சி)

மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுனர் மற்றும் முதலமைச்சர் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். இதேவேளை, திருகோணமலை மாவட்ட பட்டதாரி ஆசிரியர்கள் 197 பேருக்கு நேற்று முன்தினம் நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டன என்று மேலும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. (சி)

துணுக்காயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்ட திடீர் முறியடிப்புத் தாக்குதலால் நிலைகுலைந்த இராணுவத்தினர் ஆயுதங்கள் சிலவற்றையும் தமது சகா ஒருவரின் சடலத்தையும் கைவிட்டு பழைய நிலைகளுக்கு பின்வாங்கி ஓடினர் என்றும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த முறியடிப்புத் தாக்குதலில் 25 படையினர் கொல்லப்பட்டதுடன் 40 பேர் காயமடைந்தனர் எனவும் தமது தரப்பில் போராளிகள் நால்வர் வீரச்சாவடைந்தனர் என்றும் விடுதலைப்புலிகள் மேலும் தெரிவித்தனர். (அ-சி)

மாகாணசபைத் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் கூட்டத்தில் தொடர்ந்து கூறியவை வருமாறு

இந்த நாட்டில் உள்ள மூவின மக்களையும் ஒன்றிணைத்துள்ள இனவாதமற்ற ஒரேயொரு கட்சியென்றால் அது ஐக்கிய தேசியக் கட்சி மட்டும்தான்.

அதன் காரணமாகவே நாம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுடனும் மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசனுடனும் இணைந்து அரசியல் நடத்துகிறோம்.

ஆனால், மஹிந்த ராஜபக்ஷவின் அரசு இனவாதத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு அரசியல் செய்கிறது.

இனவாத அரசால் நாட்டைக் காப்பாற்ற முடியாது

இந்த ஆட்சியில்தான் கொலை, கடத்தல் உள்ளிட்ட பலதரப்பட்ட மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இவற்றின் மூலம் இந்த நாட்டின் நல்லதொரு அடையாளத்தை மஹிந்த ராஜபக்ஷ அழித்து வருகிறார்.

பொருளாதார வீழ்ச்சியாலும் இனவாத அடக்குமுறையாலும் இந்த நாடு சீரழிந்து வருகிறது. இந்த நிலையை மாற்றி நல்லதொரு நாட்டைக் கட்டியெழுப்பும் திறன் ஐக்கிய தேசியக் கட்சியிடம் மாத்திரமே உண்டு.

இந்த மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி நிச்சயம் வெற்றி பெற்று அதிகாரத்தைக் கைப்பற்றும். இந்த அதிகாரம் அரசை ஆட்சியில் இருந்து முற்றுமுழுதாக விரட்டியடிக்க வழிவகுக்கும்.

ஒருபோதும் இனவாத அரசால் இந்த நாட்டைக் காப்பாற்ற முடியாது. இனவாத மற்ற அனைத்து இனங்களையும் ஒன்றிணைத்த எமது கட்சியால் மாத்திரமே நாட்டைக் காப்பாற்ற முடியும். நாம் இந்த நாட்டுக்காக எம்மை அர்ப்பணித்துள்ளோம் - என்றார். (சி)

பிரபல ஆசிரியர் M.C.சுதாகரனின்
பொருளியல் நூல்கள் வெளிவந்து விட்டன

★1000 M.C.QS- I&II (விடைகளுடன்)
★தவணைமுறை விடயங்கள் (புள்ளி விபரங்களுடன்)

கிடைக்கும் இடங்கள்

பூபாலசிங்கம் புத்தகசாலை	- யாழ்ப்பாணம்
BOOK LAB	- திருநெல்வேலி
துர்க்கா பொத்தகசாலை	- சுன்னாகம்
நாயகபாலன் ஸ்ரோர்ஸ்	- மானிப்பாய்
பிரியங்கா புத்தகசாலை	- உடுப்பிட்டி
MODERN ஸ்ரோர்ஸ்	- நெல்லியடி
செல்லாச்சி புத்தகசாலை	- பருத்தித்துறை
பொதிகை புத்தகசாலை	- சாவகச்சேரி

தடைசெய்யப்பட்ட பொலித்தீனை பாவிப்போர் மீது கடும் நடவடிக்கை

சோதனை நடவடிக்கை உடனடியாக அமுல்

கொழும்பு,ஜூலை 28

20 மைக்ரோனுக்குக் குறைவான பொலித்தீன் வகைகளைப் பாவிப்பவர்களைப் பிடிக்கும் நடவடிக்கை ஒன்று மத்திய சுற்றாடல் அதிகார சபையால் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்நடவடிக்கையின் போது சிக்கும் 20 மைக்ரோனுக்குக் குறைவான பொலித்தீன் வகைகளைப் பாவிப்பவர்களுக்கு நீதிமன்றத்தால் இரண்டு வருட சிறைத் தண்டனை வழங்கப்படும் என்று மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு உள்ளிட்ட பல இடங்களில் இத்தேடுதல் நடவடிக்கை அடுத்தவாரம் முதல் முன்னெடுக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார். 20 மைக்ரோனுற்குக் குறைவான பொலிதீன் வகைகள் சுற்றாடலுக்கு மிகவும் ஆபத்தாக உள்ளன என்று கூறிய அவர், இதுதொடர்பாக வர்த்தகர்களையும், பாவனையாளர்களையும் அறிவுறுத்தியும் கூட அவற்றின் பாவனை குறைந்ததாகத் தெரியவில்லை என்று கவலை தெரிவித்தார்.

(சி)

சார்க் திட்டமிடல் செயற்குழுவின் புதிய தலைமை இலங்கையிடம்

கொழும்பு, ஜூலை 28

'சார்க்' திட்டமிடல் செயற்குழு அமர்வு கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக் காலை 9.45 மணிக்கு ஆரம்பமாகியது.

'சார்க்' அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளினது பிரதிநிதிகள் செயற்குழு அமர்வில் பங்குபற்றியிருந்தனர்.

இதன்போது செயற்குழுவின் புதிய தலைமைப் பொறுப்பு இலங்கைக்குக் கிடைத்தது.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர்நாயகம் கிரேஷ் ஆசீர்வாதம் இதற்குத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்.

இந்த அமர்வில் இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான்,நேபாளம், பூட்டான், மாலைதீவு, ஆப்கானிஸ்தான் மற்றும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் முக்கிய பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். பிராந்திய ரீதியாக பலதரப்பட்ட உறவுகள், பயங்கரவாத ஒழிப்பு, வறுமை ஒழிப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் குறித்தும் செயற்குழு அமர்வின்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்த அமர்வு இன்றும் நடைபெறவுள்ளது. (சி)

மல்லாவிக்குச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுத தளபாடங்களும் விடு தலைப் புலி உறுப்பினர் ஒருவரின் சடல மும் மீட்கப்பட்டுள்ளன என்றும் இராணு வத் தரப்பு கூறியுள்ளது.

வவுனியா, நாவற்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் இரண்டு படையினர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

30 சடலங்கள் ஒப்படைப்பு

வன்னிக் களமுனையில் மீட்கப்பட்ட விடுதலைப்புலி உறுப்பினர்களின் 19 சடலங்கள் நேற்று ஓமந்தை சோதனை நிலையத்தில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவினரிடம் கையளிக்கப்பட்டன என்றும் நேற்று முன்தினமும் 11 சடலங்கள் ஒப்படைக்கப்பட்டன என்றும் படைத் தரப்பு தெரிவித்துள்ளது.

சுகந்தன் முகாம் கைப்பற்றப்பட்டதாம்

இதேவேளை

முல்லைத்தீவு காட்டுப்பகுதியில் உள்ள கிரிபன்வெவவில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் 'வன்போ(F)ர்' படை வளாகத்திலுள்ள 'சுகந்தன்' செய்மதி முகாமைத் தாம் கைப்பற்றி விட்டதாக படைத் தரப்பினர் நேற்று நள்ளிரவு அறி வித்தனர்.

கருணா அணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றனர்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் புதூர் தேவாலய உற்சவத்தில் கலந்து கொண்டிருந்த வேளையே இவர்கள் சுட்டுக்கு இலக்காகினர் என்று தெரிவிக்கப்பட்டது. தங்களை அதிரடிப்படையினரே சுட்டனர் என்று காயமடைந்த இருவரும் தெரிவித்திருக்கின்றனராம்.

இரு தரப்புகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் ஏற்பட்டிருந்த முறுகல் நிலைமையே நேற்றுத் துப்பாக்கிச் சூட்டில் முடிந்திருக்கின்றது என்று சில தகவல்கள் தெரிவித்தன. எனினும் அந்தத் தகவல்களை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. காயமடைந்த இருவரும் மட்டக்களப்பு வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

உணவுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடியதாக இருந்தது.

பொருள்கள் யாழ். சந்தையில் தாராளமாக இருந்ததால், வர்த்தகர்கள் பொருள்களை எடுத்துவருவதில் பெரிதாக நாட்டம் செலுத்தவில்லை. உண்மையில் அவர்களின் செயற்பாடுகளில் தொய்வு ஏற்பட்டது. அதுவே பாவனைப் பொருள்களுக்கு தட்டுப் பாடு ஏற்படுவதற்கும் விலை யேற்றத்துக்கும் காரணமாகும்.

இந்நிலையில் வர்த்தகர் சங்கம் வர்த்தகர்களுடன் கலந்துரையாடலை நடத்தியதன் விளைவாக வர்த்தகர்கள் பொருள்களை எடுத்துவர இப்போது ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

ஒரே தடவையில் 'வின்ரன்', ''றுகுணு'', ''ஜால'' ஆகிய மூன்று கப்பல்களில் எடுத்து வரப்பட்டுள்ள உணவுப் பொருள்கள் காங்கேசன் துறைமுகத்தில் இரவு பகலாக இறக்கப்படுகின்றன.

இறக்கப்படும் பொருள்கள் உடனுக்குடன் கோண்டாவில் களஞ்சியத்துக்கு எடுத் துவரப்பட்டு வர்த்தகர்களுக்கு வழங்கப் படுகின்றன.

அரிசி, சீனி, பால்மா, உள்ளி, மரக்கறி எண்ணெய், உருளைக்கிழங்கு போன்ற பொருள்கள் தாராளமாக எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்தப் பொருள்கள் அநேகமாக இன்று முதல் சந்தையில் மக்களுக்கு கிடைக்கும் - என்று அந்த வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன. (அ-1)

புலிகளை முற்றாகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

சீட்டுக்கட்டில் இருந்து உதிரும் சீட்டுக்களைப் போன்று விடுதலைப்புலிகள் வீழ்ச்சி கண்டு வருகின்றனர். எனவே அவர்களை மேலும் முறியடிப்பதற்கு இராணுவத்திலிருந்து தப்பியோடி 10 ஆயிரம் பேர் மீண்டும் திரும்பவேண்டும்.

கடந்த நான்கு முதல் ஐந்து வருடங்களுக்குள் தப்பியோடியவர்கள் இராணுவத்திற்கு அவசரமாகத் தேவைப்படுகின்றனர். அவர்கள் பல்வேறு தனிப்பட்ட காரணங்களால் தப்பியோடியிருக்கலாம். எனினும் அவர்கள் மீண்டும் பணிக்குத் திரும்ப வேண்டும்.

தப்பியோடிய இராணுவத்தினரின் பயிற்சிகளுக்காக நாம் பெருமளவு நிதியையும், நேரத்தையும் செலவிட்டுள்ளோம். ஆனால் அவர்கள் தனிப்பட்ட காரணங்களை முன்வைத்துத் தப்பியோடியுள்ளனர்.

புலிகளை தோற்கடிக்கும் காலம் தொலைவில் இல்லை

தப்பியோடியவர்களை மீளச் சேர்க்கும் பணிகளை நாம் முடுக்கி விட்டுள்ளோம். தப்பியோடிய எல்லோரும் பணிக்குத் திரும்பவேண்டும். போர் ஒரு முக்கிய கட்டத்தை அடைந்துள்ளது. இராணுவத்தினரின் கரம் மேலோங்கியுள்ளது. அவர்களுக்கு எல்லாத் தரப்பினரின் உதவிகளும் தேவை. விடுதலைப் புலிகள் முறியடிக்கப்பட்டு வருகின்றனர். அவர்கள் முற்றாக முறியடிக்கப்படும் காலம் அதிக தொலைவில் இல்லை. எனவே இராணுவத்திலிருந்து தப்பியோடியோர் விரைவாக மீண்டும் பணியில் சேர்ந்து தற்போது வடபகுதியில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளுக்கு உதவவேண்டும்- என்றார். (அ-சி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.07.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org